# ஆண்டு அறிக்கை 2018

வருங்காலச் சந்ததிக்கு ஆரோக்கியமான
கரையோர மற்றும் கடல்சார் சூழலொன்றை
உருவாக்குவதற்கு நாம் அர்ப்பணிப்பினைக்
கொண்டிருப்போமாக



**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை**

**மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு**

Marine Environment Protection Authority

Annual Report 2018

©Marine Environment Protection Authority

## Concept & design:

Finance Division and IT Team
Marine Environment Protection Authority
Head office
Colombo

# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

## ஆண்டு அறிக்கை

## 2018



# உள்ளடக்கங்கள்


01. பின்னணி ........................................................ 15

02. இலங்கையில் கடல்சார் சூழல் மாசடைவதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்...... 19

03 நிறுவனத்தின் நிருவாக அறிக்கை ........................................ 25

04. பணிப்பாளர்களின் அறிக்கை........................................ 33

05. கணக்காய்வு, முகாமைத்துவ குழுவின் அறிக்கை.............................. 39

06 மனித மூலதன அறிக்கை........................................ 43

07 தொழிற்பாடு செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு ................................ 53

08. உள்ளகப் பிரிவுகளின் பணிகள்........................................ 71

09 அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கைகள், நிதிக் கூற்றுக்கள் மற்றும் குறிப்புகள்...... 79

10 முன்னைய ஐந்து ஆண்டுகளின் நிதி விளைவுகள் ................................ 101

11. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ................................ 105




1981இன் முன்னாள் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் இல. 59இன் கீழ் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும் அத்துடன் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் இலங்கைக்கு பிரயோகித்தக்க கடல்சார் தீழ்ப்பு மீது சர்வதேசச் சமவாயங்களை அமுல்படுத்துவதற்கும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் சட்டபூர்வ அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்காக புதிய 2008இன் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இல.35 இயற்றப்பட்டதுடன், இது 2009 ஜனவரி 01 அன்று செயற்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

## கூட்டாண்மைத் தகவல்

அதிகார சபையின் பெயர்:

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

சட்டபூர்வ நியதியாக்கங்கள்

2008இன் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இல.35இன் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கட்டுப்படுத்தும் அதிகார சபை

**பதிவு செய்யப்பட்ட விலாசம் மற்றும் தலைமை அலுவலகம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

இல.177, நாவல வீதி,
நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.

தொலைபேசி: 011 2554006 / 011 2554373
பக்ஸ்: : 011 2556505 / 011 2554173

E-mail : info@mepa.gov.lk Web: mepa.gov.lk

## பணிப்பாளர் சபை

### தலைவர்

01. ரியர் அட்மிரல் (இளைப்பாறிய) ரொஹான் பெரேரா
அமைச்சரால் நியமிக்கப்பட்

### பணிப்பாளர்கள்

02. திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க
மேலதிகச் செயலாளர்,
மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு

03. திரு.என்.எல்.எம்.பீ.லியனகே
ஜனாதிபதிக்கான பாராளுமன்றச் செயலாளர்

04. திரு.எ.டபிள்யு.செனிவிரத்ன
பணிப்பாளர் நாயகம், வணிகக் கப்பற்றுறை திணைக்களம்

05. திரு.எஸ்.ஜ.எம்.ரோஸா
பணிப்பாளர், தேசிய வரவு-செலவுத்திட்டத் திணைக்களம்

06. திரு. மகேந்திர பெரேரா
(அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்)

07. திரு.போஷித பெரேரா
பணிப்பாளர், வெளிவாரி அலுவல்கள் அமைச்சு

08. திருமதி சேபாலிகா விக்ரமசிங்க
பணிப்பாளர், கடற்றொழில் அமைச்சு

09. கொமொடோர் திரு.பி.டி.எஸ்.டயஸ்
பணிப்பாளர், இலங்கைக் கடற்படை

10. கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் குமார
பொது முகாமையாளர்

# அதிகாரசபையின் நிறுவன அமைப்பு



# அதிகார சபையின் முகாமைத்துவக் குழாம்

## சிரேஷ்ட முகாமையாளர்கள்

### தலைவர்
ரியர் அட்மிரல் (இளைப்பாறிய) ரொஹான் பெரேரா - RSP, VSV, USP

### பொது முகாமையாளர்
கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் குமார[B.Sc. Special (Zoology), Ph.D.]

### பதில் பிரதி பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)
திரு.எ.ஜே.எம்.குணசேகர [BSc,MSc (NRM),MSc.(Maritime Affairs]

### முகாமையாளர் சட்டம் -
செல்வி எ.காரியவசம் [LLB, M Sc (Maritime Law and Policy]

### நடுத்தர முகாமையாளர்கள்

கணக்காளர் -
திரு.டி.ஆர்.சி.ஜயவர்தன [B.Com.SP,MBus (Accounting)/ LICA]
பிரதி முகாமையாளர் (மேல் மற்றும் வட மேல் மாகாணம்) -
திருமதி ரி.எஸ்.ரணசிங்க [B Sc, M.Sc.(Env.Sc), M.Sc.(Maritime Affairs)]
பிரதி முகாமையாளர் (தென் மாகாணம்) -
திருமதி ஆர்.பி.ரணவீர [B Sc. SP(Hons), M.Sc.(NRM)]
உதவி முகாமையாளர் (மாகாணம்) -
திரு. எச்.ரி.என்.ஐ.பியதாச [B.Sc, M.Sc.(NRM), M Sc. (Maritime Affairs)]
உதவி முகாமையாளர் (கப்பல் அளவீடுகள்) -
திரு. ஆர்.என்.பிரியதர்ஷன [B.Sc, NDES]
உதவி முகாமையாளர் (மனித வளங்கள்) -
திருமதி டபிள்யு.எச்.கே.ஹிட்டிபண்டார [B.Sc]
உதவி முகாமையாளர் (திட்டமிடல்) -
திரு.கே.பி.கே.ரி.யு.பெர்னாண்டோ [B Sc(Hons),PGD (Applied Statistics)]
உதவி முகாமையாளர் (செயற்பாடுகள்) -
திரு.ரி.ஜி.ஐ.பி.அமரநாயக்க [B.Sc. SP(Hons),MSc(DAMm)]
உதவி முகாமையாளர் (நிருவாகம்) -
திரு. எஸ்.எம்.சி.குமாரகே [B.B.Mgt. (Sp.)(HRM)]
உள்ளகக் கணக்காய்வாளர் -
திரு.டபிள்யு.எ.புபுது உதான[EDBA(Col),AMA(CMASL),ICBA,SMAAT,Intermediate (CASL), CBA(CASL)]
பதில் உதவி முகாமையாளர் (வட மற்றும் கிழக்கு மாகாணங்கள்) -
திரு.ரி.சிறீபதி [B Sc]

# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்

1 மேற்கு மற்றும் வடமேற்கு மாகாண அலுவலகம் மற்றும் கொழும்பு மாவட்ட அலுவலகம்
எண்: 177, நவலரோட், நரஹன்பிடா, கொழும்பு 05.
தொலைபேசி: 011 2554078 / 071 3462298
தொலைநகல்: 011 2556505 / 011 2554173




2 மாவட்ட அலுவலகம் - களுத்துறை மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
எண்: 28, ககபாடா சாலை, களுத்துறை.
தொலைபேசி:: 034 2221790 / 071 2666456
தொலைநகல்: 034 2221790

3 தெற்கு மாகாண அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம், காலி
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
எண்: 426 / பி, கொழும்பு சாலை,
தாடல்லா, காலி.
தொலைபேசி: 091 2233549 / 091 2233547 / 071 8214184
தொலைநகல்: 091 2233549

4 மாவட்ட அலுவலகம் - மாத்தறை மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
18 வில்மோட் பாலசூரியா அவென்யூ,
நுபெ, மாத்தறை.
தொலைபேசி: 041-2234250 / 071 4926849
தொலைநகல்: 041 2234250

5 மாவட்ட அலுவலகம் - ஹம்பாந்தோட்டா மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
46 இரண்டாவது மாடி, நிர்வாக வளாகம்,
சிரிபோபுரா, ஹம்பாந்தோட்டா.
தொலைபேசி: 047 2256372 / 071 3624651
தொலைநகல்: 047 2256372

6 மாவட்ட அலுவலகம் - அம்பாறை மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
பிரதேச சபா கட்டிடம்,
கிராம சபை சாலை, தம்பிலுவில்
முதல் குறுக்கு சாலை,
தொலைபேசி: 067 2265416
தொலைநகல்: 067 2265416

7 கிழக்கு மாகாண அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம், திருகோணமலை மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
4 வது மைல் போஸ்ட், திருகோணமலை.
தொலைபேசி: 026 2050805 / 071 8383363
தொலைநகல்: 026 2050805

8 மாவட்ட அலுவலகம் - யாழ்ப்பாணம் மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2212663
தொலைநகல்: 021 2212663

9 மாவட்ட அலுவலகம் - புத்தளம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
புதிய சேவனா - பகுதி பி,
பிராந்திய வள மேம்பாட்டு ஆணைய கட்டிடம்,
பப்பாலா,
தொலைபேசி: 032 2222865 / 071406600
தொலைநகல்: 032 2222865

10 மாவட்ட அலுவலகம் - கம்பாஹா மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
704/9 ஏ இரண்டாவது குரானா,
கொழும்பு சாலை, நெகம்போ.
தொலைபேசி: 031 2228606 / 071 8325678
தொலைநகல்: 031 2228606

11. மாவட்ட அலுவலகம் - மன்னார் மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
மாவட்ட அலுவலகம், மன்னார்
தொலைபேசி: 023 2251758
தொலைநகல்: 023 2251758

12. மாவட்ட அலுவலகம் - மட்டக்களப்பு மாவட்டம்
கடல் சார்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
எண்: 03, பிள்ளையர் கோவில் சாலை,
கல்லடி, மட்டக்களப்பு
தொலைபேசி: 065 2224979

# தலைவரிமிருந்து செய்தி



2018 ஆம் ஆண்டுக்கு ஆண்டறிக்கைக்கு இந்த செய்தியை விடுப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் மாசடைதல் தடுப்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை செயற்படுகின்றது. இலங்கையின் கடல்சார் பிராந்தியத்தில் இடம்பெறுகின்ற கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்றாகும்.

உள்நாட்டு ரீதியாகவும், உலகளாவிய ரீதியாகவும் முன்வைக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களிலிருந்து கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்கும் அத்துடன் தற்போது நிலவுகின்ற சூழல்ரீதியான பிரச்சனைகளை அடையாளங் காண்பதற்கும் தீர்த்து வைப்பதற்கும் புதிய ஆலோசனைகளைப் பெறுவதை குறிக்கோளாகக் கொண்டு கடல்சார் சூழல் துறைக்கு தொடர்பான சகல துறைகளையும் உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டில் நான்காவது தடவையாக தேசிய கடல்சார் சூழல் ஆய்வரங்கு நடத்தப்பட்டது.

கடற்றொழில் கைத்தொழிலுடன் இணைந்துள்ள செயற்பாடுகளின் காரணமாக இடம்பெறுகின்ற கடல்சார் மாசடைதலினைப் பாதுகாப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் நிருவகிப்ப தற்குமான தேசிய மூலோபாயங்களை வகுத்தமைத்தல் அதிகாரசபையின் தலையீட்டினாலும் வழிகாட்டலினாலும் மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம், வெகு விரைவில் கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம் மற்றும் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுடனான கூட்டுமுயற்சியுடன் உத்தேசமான தந்திரோபாயங்கள் அமுல்படுத்தப்படவுள்ளது.

2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ஆண்டிக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 90 மில்லியன் ஒதுக்கீட்டின் மூலதன ஏற்பாட்டிலிருந்து, ரூபா 84 மில்லியன் செலவழிக்கப்பட்டதுடன் 93% கொண்ட பௌதீக முன்னேற்றமொன்றுடனும் அத்துடன் 67% கொண்ட நிதிசார் முன்னேற்றமொன்றுடனும் காணப்பட்டது. ஆண்டின் போது திறைசேரி ஒதுக்கீடுகள் கிடைக்காமை அல்லது ஒதுக்கீடுகள் தாமதம் ஆகியவற்றினால் நிதிசார் முன்னேற்றத்தில் குறைவு பிரதானமாக விளைந்துள்ளது.

ஏற்கனவே விளைவிக்கப்பட்ட கெடுதலை தணிப்பதற்கும் அத்துடன் 2018 இல் இடம்பெற்ற பெருமளவு எண்ணெய் சிந்துதல்களினால் இடம்பெற்ற சேதத்தை தடுப்பதற்கும் அத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பின் உதவியைப் பெறுவதன் மூலம் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரசபையினால் முடியுமாக இருந்தது.

இலங்கைக்குரிய கடலில் மாசடைதலின்றி தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் நோக்கில் சமுர்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் கரையோரத்தை பாதுகாக்கும் எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் சுற்றாடல் மாசடைதலுக்கு கூடுதலாக உட்பட்டுள்ள கரையோரங்களில் மாசடைதலைக் குறைப்பதற்கு முடியுமாக இருந்தது.

2018 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் கடல்சார் மாசடையும் செயற்பாடுகளைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் நிருவகிப்பதற்கும் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஆகியோரிடமிருந்து கிடைத்த தலைமைத்துவத்திற்கும் மற்றும் வழிகாட்டலுக்கும் அத்துடன் பிரதி அமைச்சரினாலும் மற்றும் அமைச்சுக்கான செயலாளரினாலும் வழங்கப்பட்ட ஆலோசனை க்கும், ஆதரவுக்கும் அத்துடன் பணிப்பாளர் சபையினாலும், பொது முகாமையாளரினாலும், பிரதி பொது முகாமையாளரினாலும் மற்றும் பணியாளரினாலும் நீடிக்கப்பட்ட உதவிக்கும் நன்றிக்கடனைப் பதிவுசெய்வதற்கு நான் விரும்புகின்றேன்.

றியர் அட்மிரல் (இளைப்பாறிய) ரோஹன பெரேரா, *RSP, VSV, USP*
தலைவர்

# பொது முகாமையாளரிமிருந்து செய்தி



2018 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு இந்த செய்தியை விடுப்பது மகிழ்ச்சிக்குரிய தாகும்.

2018 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் முகங்கொடுக்கப்பட்ட சவால்களை வெற்றி கொண்டு மிகவும் முறைப்படியானதும், உரிய வகையிலுமான தன்மையில் கடல்சார் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை அமுலாக்குவது சாத்தியமாகியது. கடல்சார் சூழலைப் பாதுகாப்பதில் தந்திரோபாயத்துடனும் ஒன்றிணைந்ததுமான முறைமையில் அமுலாக்குவதற்கும் அத்துறையில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்பாட்டினுள் இடுவதற்கு அவசியமான பொறிமுறையைத் தாபிப்பதற்கும் அடித்தளத்தை 2018 ஆம் ஆண்டில் அதிகாரசபை இட்டது.

தேசிய பொருளாதாரத்தில் தேசிய கொள்கை களைத் தயாரிக்கும் போது கடல்சார் சூழலை நோக்கி ஈர்த்தெடுக்கப்படும் விசேட கவனத்தை செலுத்த சுற்றுலாத்துறையில் துரிதமான வளர்ச்சியினதும் மற்றும் காரணமாக, கடல்சார் சூழலைப் பாதுகாப்பதை நோக்கி சமூக ஊடகங்கள் ஊடாக விளைவிக்கப்படுகின்ற கடல்சார் சூழலைப் பாதுகாப்பதினதும் மற்றும் நிருவகிப்பதினதும் முக்கியத்துவம் தொடர்பில் சமூகத்தில் கடல்சார் சூழல் தீழ்ப்பினதும் அத்துடன் கலந்தாய்வொன்றை கட்டியெழுப்புதலினதும் மூலங்களை அடையாளங்காண்பதன் மூலம் வருங்கால சந்ததிக்கு சிறந்த கடல்சார் சூழலொன்றை விட்டு வைக்கின்ற மிகவும் சீரியதும், பொறுப்பானதுமான பணியில் நாம் ஈடுபட்டிருக்கின்ற இந்த வேளையில், இலங்கையின் சமூகத்தின் விழிப்புணர்வு அர்ப்பணிப்பும், ஒன்றுபடுதல் அதற்கு அத்தியாவசியமானவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதிகாரசபையின் ஆரம்பத்திலிருந்து தொழிற்பாட்டிலான செயற்பாடுகள் படிப்படியாக விஸ்தரித்ததுடன், முழு தீவகத்தை உள்ளடக்கி அவற்றை வலைப்பின்னலிடுவதற்கும் அத்துடன் அமுலாக்குவதற்கும் முடியுமாக உள்ளது. வெற்றிடமாக இருந்த பதவியணியினரை ஆட்சேர்த்தல் அத்துடன் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை அதிகரித்தல் ஆகிய நிலைபேறான வழிவகைகள் ஊடாக மாசற்ற கரையோரக் கடல்சார் சூழலைப் பராமரிப்பதற்கு புதுமையான முறைமைகள் மூலமும் மற்றும் தந்திரோபாயங்களையும் அதிகாரசபை இன்னுமே ஆராய்ந்து வருகன்றது.

கடல்சார் சூழலைப் பாதுகாப்பதிலும் அத்துடன் கடல்சார் சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கு அவற்றை நிருவகிப்பதிலும் முகங்கொடுக்கப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதில் அவர்களது வழிகாட்டலுக்காகவும், ஆதரவுக்காகவும் அதிமேன்மை தங்கிய ஜனாபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சர் ஆகியோருக்கும், கௌரவ பிரதி அமைச்சர் அனுராத ஜயரட்ன, அமைச்சுக்கான செயலாளர் மற்றும் அவரது பதவியணியினர், அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினர் அத்துடன் பணியாட் உறுப்பினர்கள் ஆகியோருக்கும் கடல்சார் சூழலைப் பாதுகாக்கும் மாபெரும் பொறுப்பினை தோளில் சுமப்பதில் என்னுடன் கைகோர்த்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதற்கு நான் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன்.

கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் குமார
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்



## தொலைநோக்கு

“நிலைத்திருத்தல் தேசிய
அபிவிருத்திக்கும், இலங்கை மக்களின்
சேமநலனுக்கும் மற்றும்
பொருளாதாரத்திற்கும் இலங்கை யைச்
சுற்றி தீழ்ப்பு அற்ற கடல்சார் சூழலை
உருவாக்குதல்”

## செயற்பணி

“தற்போதையதும், எதிர்காலத்திற்கு மானதுமான
சந்ததிகளின் கடல்சார் சுற்றாடலின் நிலைத்திருத்தல்
முகாமைத் துவத்திற்கு பயனுறுதிவாய்ந்த ஒழுங்கு
விதிகளின் வினைப்படுத்தலினதும், சம்பந்தப்பட்ட
சர்வதேச சமவாயங்களினதும் பங்காளரின்
ஒருங்கிணைப்பினதும் மற்றும் ஒன்றுதிரட்டலினதும்
மற்றும் வேறு மூலவளங்களினதும்
அமுலாக்கத்தினதும் ஊடாக இலங்கையின்
நீர்ப்பரப்புக்களில் கடல் தீழ்ப்பைத் தடுப்பதற்கும்,
கட்டுப் படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கும்
அவசியமான திறன்களுடனும், தகுதி யுடனும்,
தாபனரீதியான கட்டமைப்பினதும் மற்றும்
உட்கட்டமைப்பு வரைச்சட்டத் தினதும்
முகவராண்மையொன்றாக இருத்தல்.”



# 01

# பின்னணி



# பின்னணி

1.1 அறிமுகம்

தீவகமொன்றாக, இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான நிலையொன்றில் இலங்கை அமைந்துள்ளது. சர்வதேசச் சட்டங்களின் பிரகாரம், அதன் நிலப்பரப்பின் அளவின் எட்டுத் தடவைகளுக்கு மேலாக பரந்த கடல்சார் பிராந்தியமொன்றில் மூலவளங்களைப் பெறுவதற்கு இலங்கை உரித்தினைக் கொண்டுள்ளது. எமது நாட்டுக்குச் சொந்தமான சமுத்திரப் பிராந்தியத்தின் வழியே கிழக்கையும், மேற்கையும் சர்வதேச கப்பற் துறை வழிகள் இணைக்கின்றன. இலங்கைக்குச் சொந்தமான ஆள்புல நீர்கள் பெருமளவு மூலவளங்களுடன் வளமானது என்பதுடன், இவை கப்பல்களின் ஓட்டத்தினதும், நிலத்தில் மனித செயற்பாடுகளினதும் காரணமாக படிப்படியாக தீழ்ப்படைகின்றது.
இதனால் எமது சமுத்திர மூலவளங்களை தீழ்ப்பின்றி பராமரிக்குமுகமாக 1981இன் இல.59 கடல்சார் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகார சபை அமைக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்திற்கு பிரயோகிக்கத்தக்க கடல்சார் தீழ்ப்பு மீதான சர்வதேச சமவாயத்தை அமுல்படுத் ்காகவும், கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்காகவும், தணிப்பதையும் அத்துடன் கட்டுப்படுத்து வதையும் செயற்படுவதற்காகவும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் உடமையாக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்கைள பலப்படுத்துவதற்காக 2008இன் இல.35 புதிய கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டதுடன், இது 2009 ஜனவரி 01 அன்றிலிருந்து செயற்படும் விதத்தில் அமுலாக்கப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் புதிய அதிகாரச்சட்டத்தினால் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையாக அதிகார சபையின் பெயர் மாற்றப்பட்டது.
2015இல் அதிகாரத்திற்கு வந்த புதிய அரசாஙகத்தின் தூரநோக்கின் படி, கடற்படை முனையொன்றாக இலங்கையை அபிவிருத்தி செய்தல் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த நோக்கத்தின் பிரசன்னத்தில் புதிய

துறைமுகங்களின் நிருமாணமும், நடைமுறை யிலான துறைமுகங்களின் மேம்படுத்தலும் செய்யப்பட்டன. மேலதிகமாக, கடல்சார் மூலவளங்களைப் பெறுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் வகுத்தமைக்கப்படு கின்றன. எனவே, அபிவிருத்தி நடவடிக்கை ஊடாக இடம்பெறுகின்ற தீழ்ப்பினைக் குறைந்த பட்சமாக்குவதற்கும், இந்த கைத்தொழில்களின் நிலைத்திருக்கும்தன்மையை பராமரிப்பதற்கும் இந்த அதிகார சபையின் பங்கு மீதான பங்களிப்பு அவசியமானதாகும்.
இதன் பிரகாரம், கடல்சார் சூழலின் தீழ்ப்பினை குறைந்தபட்சமாக்குவதற்கும், தணிப்பதற்கும் அத்துடன் முகாமைத்துவம் செய்வதற்கும் நிறுவனம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதனால், பெருமளவு செயற்றிட்டங்களை இந்த அதிகார சபை அமுலாக்கியது.

1.2 அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

அதிகார சபையின் பணிகள்

(அ) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தினதும், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை பயனுறுதி யாகவும், திறமையாகவும் நிருவகித்தலும், நடைமுறைப்படுத்தலும்.
(ஆ) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக் களில் அல்லது அதன் முற்கரையில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் அதன் கரை மீது கப்பல்சார்ந்த செயற்பாட்டிலும், கடல்சார் கரையோரம் தொடர்பான நடவடிக்கையிலும் இருந்து எழும் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்குமான செயற்றிட்ட மொன்றை வகுத்தலும், நிறைவேற்றுதலும்.
(இ) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக் களில் அல்லது அதன் முற்கரையில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் அதன் கரை முனங்கிலும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலும் ஏதேனும் கப்பல் சார்ந்த செயற்பாட்டினின்று அல்லது கடல்சார் கரைசார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டினின்று எழும் தீழ்ப்பைத் தடைசெய்யும், குறைக்கும், கட்டுப் படுத்தும் அத்துடன் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை திணைக்களங்களுடனும் முகவராண்மை களுடனும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
(ஈ) இலங்கையின் கடற்கரையையும் மற்றும் அதன் கரையோர வலயத்தையும், அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள இலங்கையின் அல்லது ஏதேனும் வேறு கரைசார்ந்த வலயத்தின் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் நிருவகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், பேணிக் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.
(உ) ஏதேனும் எண்ணெய்க்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்திற்கு அல்லது வேறு ஏதேனும் தீழ்ப்பாக்கிக்கு போதியளவிலும், பயனுறுதியுடையதுமான ஏற்பு வசதிகளை வழங்குதல்.
©HARAN Graph இலங்கை அரசாங்கம் ஏற்றங் கீகரித்துள்ள, ஏற்றுக்கொண்டுள்ள, இணங்கி யுள்ள அல்லது அங்கீகரித்துள்ள கடல்சார் தீழ்ப்பைக் கையாளும் எல்லா சர்வதேச சமவாயங்களையும், இயைபான பின்னேடு களையும் கடைப்பிடிப்பதனை விதந்து ரைத்தலும், பரிந்துரைத்தலும்



(எ) தேசிய எண்ணெய் தீழ்ப்பு எதிர்பாரா திட்டத்தை வகுத்தமைத்தலும், நடைமுறைப் படுத்தலும்.

(ஏ) பெற்றோலியம் அல்லது அது தொடர் பான செயற்பாடுகள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வை மேற் கொள்ளும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர் களினதும், சேவைத் துணை ஒப்பந்தக்காரர் களினதும் எவரேனும் ஆளினதும் நடத்தையை மேற்பார்வை செய்தலும், ஒழுங்குபடுத்துதலும், கண்காணித்தலும்.

(ஐ) கடல்சார் சூழலைப் பேணிக் காக்கும் அவசியம் பற்றி சமுதாயத்தின் வெவ்வேறு குழுக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கு தல்.

(ஒ) மேற்கூறப்பட்ட பணிகள் எல்லா வற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

அதிகார சபையின் அதிகாரங்கள்

(அ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்கள் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல்சார்ந்த வலயத்தை ஏதாவது கப்பல் அடிப்படையிலான அல்லது கடல் அடிப்பை டயிலான கடல்சார்ந்த தொடர்பிலான நடவடிக்கையினால் பயனுறுதியுடன் பாது காத்தலும், பேணிக் காப்பாற்றுதலும்.

(ஆ) ஏதாவது கப்பல் அடிப்படையிலான நடவடிக்கைகளிலிருந்து அல்லது கரை அடிப்படையிலான நடவடிக்கையிலிருந்து எழுகின்ற ஏதாவது தீழ்ப்பு தொடர்பில் ஆய்வு களையும், விசாரணைகளையும் நடத்துதலும், சட்ட நடவடிக்கையை ஆரம்பித்தலும்.

(இ) தீழ்ப்பின் தடுத்தல் நோக்கத்திற்காக இலங்கையின் அல்லது அதன் கடற்கரையின் அல்லது கரையோர வலயத்தின் ஆள்புல நீர்களில் அல்லது ஏதாவது வேறு கடல்சார் வலயத்தில் மேற்கொள்ளப்படும் எண்ணெயின் சகல கடல் போக்குவரத்தையும், எண்ணெய் ஏற்றிஇறக்குதல் செயற்பாடுகளையும் கட்டுப் படுத்தல்.

(ஈ) ஏதேனும் அசையக்கூடிய அல்லது அசையாத ஆதனத்தைக் கையகப்படுத்தல், வைத்திருத்தல், எடுத்தல் அல்லது குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு வழங்குதல், அடமானம் செய்தல், வாக்களித்தல், விற்றல் அல்லது வேறு முறையில் விற்றொழித்தல்;

(உ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியப் பட்டவாறு அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்தல்;

(ஊ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறு உள்ள சகல அத்தகைய ஒப்பந்தங்களை ஏதேனும் அலுவலரினால் அல்லது அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட முகவரினால் நேரடியாக பதிவுசெய்தலும், நிறைவேற்றுதலும்;

(எ) சட்டத்தின் கீழ் அதிகார சபை மீது சுமத்தப்பட்டுள்ள சகல அல்லது ஏதேனும் அதிகாரங்களைச் சுமத்தும் நோக்கத்திற்காக பெயரினால் அல்லது பதவியினால் ஏதேனும் நபரை நியமித்தல்;

(ஏ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது நிதிசார் நிறுவனத்தில் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்;

(ஐ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமான அத்தகைய பணத்தின் தொகைகளை இரவல் பெறுதல்;

(ஒ) இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள மூலங்களிலிருந்து அசையக்கூடியதும், அசையாததுமான ஆதனங்களின் மானியங் களையும், நன்கொடைகளையும் மற்றும் சாசனங்களையும் ஏற்றுக்கொள்ளுதலும், பெறுதலும், அதிகார சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்து தலும்;

(ஓ) அதிகார சபையின் அலுவல்களின் முகாமைத்துவம் தொடர்பில் விதிகளைச் செய்தல்;

(ஔ) அதிகார சபையினால் வழங்கப்படும் ஏதேனும் சேவைகளுக்கு ஏதேனும் நபரிடமிருந்து அல்லது நபர்களின் உறுப்பிலிருந்து கட்டணங்களைச் சுமத்துதல்;

(க) அதிகார சபையினால் வழங்கப்படும் சேவைகளுக்காக இலங்கையின் துறை முகங்களில் வந்திறங்கும் சகல கப்பல்கள் தொடர்பில் கட்டணங்களை அல்லது செலவு களை அறவிடுதல்;

(கா) அதிகார சபையின் பணிகளை அல்லது இச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களுக்கு இடைநேருகின்ற அல்லது அதிகார சபை மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள அல்லது அதிகார சபைக்கு தோதாக நிறைவேற்று வதற்கு அவசியமான சகல அத்தகைய வேறு செயற்பாடுகளை அல்லது விடயங்களைச் செய்தல்.



# 02

## இலங்கையில் கடல்சார் சூழல் மாசடைவதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.



# இலங்கையில் கடல்சார் சூழல் மாசடைவதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.

கடல் சூழல் கட்டமைப்பு பல்வேறு காரணங்களால் எமது கவனத்திற்கு உட்படுகின்றது. சூழல் மாசடையும் அளவு தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதனால் உலகம் முழுவதும் நீராதாரங்களை மீளமைப்பதற்கு முடியாதளவு சேதமடைந்துள்ளன. கடல் மாசடைவில் 80% தரையில் மேற் கொள்ளப்படும் மனித செயற்பாடுகளே காரணம் என ஆய்வுகள் (குறிப்பிடுகின்றன) தெளிவாகின்றன. ஏவ்வாறாயினும் சூழல் மாசடைவதில் (பிளாஸ்டிக்) பொலிதீன் பிரதானமானதுடன், கிருமி நாசினிகள், தொழிற்சாலை இரசாயனக் கழிவுகள் , மற்றும் ஏனைய கழிவுகளும் கடல்சார் சூழல் மாசடைவுக்கு காரணமாகும்.

கடல் மாசடைவதால் ஏற்படும் தாக்கத்தினை குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், எமது நீராதாரங்களை பாதுகாப்பதற்கும் காப்பகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது கடல் மற்றும் நீராதாரங்களை சுத்திகரிப்பதற்கு முறைகளை உபயோகிப்பதோடு (தீர்க்கமான காரணியாக) விசேட காரணியாக கடல் சூழல் பாதுகாப்பு மற்றும் காப்பகப்படுத்தல் தொடர்பாக பொது மக்களுக்கு தெளிவூட்டல் அவசியமாகும். இதனூடாக பிரச்சினைகளை அடிப்படையிலேயே கொல்வதாகும். அதனால் கடல்சார் சூழல் மாசடைவதை தடுப்பது தொடர்பாகவும் , சூழல் மாசடைவதற்கு ஆபத்தான காரணிகளையும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் அறிந்து கொள்ளலாம்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை கடல்சார் சூழல் மாசடைவதற்கு தாக்கமளிக்கும் 11 காரணிகளை அடையாளப்படுத்தியுள்ளன.

2.1 பிளாஸ்டிக்கினால் ஏற்படும் மாசடைவு



இங்கு பிளாஸ்டிக்கினை தரை மற்றும் கடல்சார் சூழல் மாசடைவதில் முக்கிய காரணியாக கண்டு கொள்ள வேண்டும். பசுபிக் கழிவுச் சுழற்சி பற்றி அறிந்தவர்கள் பிளாஸ்டிக் மூலம் கடல்சார் சூழலிற்கு எவ்வாறான பாதிப்பு ஏற்படும் என்பதனை அறிவார். வருடாந்தம் 8 மில்லியன் டொன் பிளாஸ்டிக் கழிவுகள் எமது கடலில் சேர்வதாக கணிப்பிடப்பட்டுள்ளதுடன் 2050 ஆகும் போது உலகம் முழுவதும் கடலில் வாழும் மீன்களை விட அதிகளவு பிளாஸ்டிக் கழிவுகள் சேரலாம் என கணிப்பிடப்படுகின்றது. பிளாஸ்டிக் மாசடைவினால் மோசமான தாக்கங்கள் பரந்தளவில் ஏற்படும். பிளாஸ்டிக் கழிவுகள் கடல் வாழ் உயிரினங்களுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும். இங்கு பிளாஸ்டிக் பை, மீன்பிடி வலை மற்றும் வேறும் கழிவுகளினால் வருடாந்தம் மீன்கள், கடற் பறவைகள், கடல் ஆமைகள் ஆயிரக் கணக்கில் புவியில் அழிந்து விடும். நுண்ணங்கிகள், மீன் வகைகள் ஏனைய உயிரினங்கள், தாவரங்களினால் பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொள்வதனால் அவைகளின் உயிர்களுக்கும், மனித உயிர்களுக்கும் ஆபத்தாக அமையும்.

2.2 கடல்சார் சூழலுக்கு நேரடியாக கழிவுகளை விடல்



தொழிற்சாலைகள், கப்பல் மற்றும் மலக்கழிவுகள் கழிவுக் குழாய்கயினூடாக கடல்சார் சூழலுக்கு விடப்படுவதனால் பாரிய மாசடைவு ஏற்படுகிறது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட படி பல வருடங்களாக கடல்சார் சூழலிற்கு கழிவுகள், இரசாயனக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், வேறும் கழிவுகளை தரையிலிருந்து அகற்றப்படுகின்றது. அறிக்கைகளுக்கு அமைய உலகம் பூராகவும் சுரங்கக் கம்பனிகள் வருடாந்தம் 220 மில்லியன் தொன்னிற்கும் அதிகமான அபாயகரமான கழிவுகளை நேரடியாக கடலுக்குள் விடுகின்றன.

இதற்கு சமனாக முழு உலகிலும் கடல் வாழ் உயிரினங்களில் 2/3 பங்களவில் உள்நாட்டு துப்பரவாளர்கள் உட்பட அன்றாடம் நாம் பாவிக்கும் இரசாயனப் பொருட்களினாலும் ஆபத்தாக அமைந்துள்ளமையை அவதானத்தில் எடுப்பது முக்கியமாகும். எமது கடல்சார் சூழலில் பல்வேறு விடயங்கள் சார்ந்திருப்பதனால் கழிவுகளை கடலில் கொட்டுவதானது பல்வேறு பின் விளைவுகளை கடல் வாழ் உயிரினங்களுக்கு மட்டுமல்ல மனிதர்களின் சுகாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும்.

2.3 மசகு எண்ணெய் பரவுவதால் ஏற்படும் மாசடைவு

கடல்சார் சூழல் மாசடைவதில் மசகு எண்ணெய் பரவுவலால் ஏற்படும் சூழல் பாதிப்பை பற்றி குறிப்பிடாமல் கதைப்பதில் அர்த்தம் இல்லை. மசகு எண்ணெய் பரவல் காரணமாக கடலில் ஏற்பட்ட பல பேரழிவுகளை உலகம் அறியுமா? அவை- EXXON Valdez Oil Spill, Deep water Horizon எனும் பேரழிவுகளைக் குறிப்பிடலாம். இவ்வாறான





மாசடைவுகளால் பல்லாயிரக்கணக்கான கடல் வாழ் உயிரினங்கள் அழிவுக்குட்பட்டுள்ளன. மசகு எண்ணெய் பரவுவலானது பறவைகளின் காப்புத்திறனையும் சிறகுகளின் நீர் விரட்டும் தன்மையையும் அழித்து விடும்.

2.4 கப்பல்களிலிருந்து வெளியேறும் கழிவுகள்

எங்களுக்குத் தெரியாமலேயே உலக வர்த்தக செயற்பாடுகளின் 90% இற்கு மேற்பட்ட போக்குவரத்துத் தேவைகளிற்கு பல்லாயிரக்கணக்கான கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. எண்ணெய், எரிவாயு போன்ற வேறு அசுத்தங்கள் , கப்பல்கள், படகுகள், வல்லங்களில் காணப்படும் கழிவுகள், அசுத்தங்களும் கடல் சுற்றுச் சூழலுக்கு குறிப்பிடத்தக்க அளவு பாதிப்புக்களை ஏற்படுத்தும். கழிவு நீர் , உணவுக் கழிவுகள், டின் மற்றுமுள்ள கழிவுகள், கடதாசி கழிவுகள், துப்பரவு செய்யும் கழிவுகள், உக்கிப் போகும், உக்கிப் போகாத கழிவுகள் கடல்சார் சூழலையும் உயிரினங்களையும் பாதிப்படையச் செய்யும். பல்வேறு நோக்கங்களுக்காக பாவிக்கப்படும் பாரிய இயந்திரங்கள், கப்பல்கள் மூலமும் குறிப்பிடத்தக்க அளவு கடல்சார் சூழல் மாசடையும்.

2.5 வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் மாசடைவு

கடல் மாசடைதலின் பிரதானமாக அறியப்படாத ஒன்றாக வெள்ளப் பெருக்கு மூலமாக சேரும் கழிவுகளை குறிப்பிடலாம். வெள்ளப் பெருக்கு, விவசாய பூமிகளிலிருந்து வெளியேரும் நீருடன் சேர்ந்த காபன், பொஸ்பரஸ், நைட்ரஜன் மற்றும் கணியங்களுடன் கலந்த மண் மற்றும் உயிர்களை எடுத்துச் சென்று அது கடல் வாழ் உயிரினங்களுக்கு ஆபத்தினை விளைவிக்கும். ஆறு, குட்டைகள் மூலம் அள்ளிச் செல்லப்படும் இரசாயனக் கழிவுகளால் கடல் மாசடைகின்றது. இதனால் கடல் வாழ் உயிரினங்களான மீன், இறால், கடல் ஆமைகள் பாதிக்கப்படுவதுடன் கடலுணவை உட்கொள்ளும் மனிதனும் பாதிப்புக்குள்ளாகின்றான்.





2.6 பெருங்கடல் அமிலத் தன்மையினால் ஏற்படும் மாசடைவு

கடல் அமிலத் தன்மையினால் கடல் வாழ் உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைகின்றது. கடல் அமிலத் தன்மை வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டை ($CO_2$) உறிஞ்சுவதால் ஏற்படும் கடல் நீரின் pH அளவு விரைவாக குறைவடையும். கடல் அமிலத் தன்மை கடல் உயிரினங்களுக்கும், அவற்றின் அன்றாட போசணை உணவுகளுக்கும், மீன் மற்றும் மீன் உற்பத்தியில் ஈடுபடும் மனிதர் வாழ்க்கைக்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சக்தியும் உண்டு. ஆய்வுகளின் மூலம் தெரிய வருவதாவது கடலில் pH மட்டம் குறைவதானது கடல் வாழ் உயிரினங்களின் நடத்தையில் தாக்கம் செலுத்துவதுடன் அவற்றின்



உயிர்களுக்கு அச்சுறுத்தலாகவும் அமைகின்றது.

2.7 கப்பல்களால் எழுப்பப்படும் ஒலியினாலான மாசடைவு

கப்பல் செயற்பாடுகளின் போதும் எழும் ஒலியினால் கடல் வாழ் உயிரினங்கள் பாதிப்படைவதாக விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் ஒப்புவித்துள்ளன. ஒலி மூலம் கடல் மாசடைவதனால் கடல் வாழ் உயிரினங்களின் வாழ்விட இடப் பெயர்வு, அவற்றின் நீந்தும் வழிகள் மாறுபடுதல், உடல் ரீதியான பாதிப்புகள் போன்றன ஏற்படுகின்றன. கப்பல் ஒலி எனும் போது அதன் இயந்திர ஒலி, கப்பல் தளத்தில் மனிதர்கள் ஏற்படுத்தும் ஒலி அடங்கும். ஒலியினால் கடலினுள் ஏற்படும் மாசடைவு வீதம் அதிகரித்துச் செல்லும். காரணம் ஒலியானது நீரினுள் வேகமாக ஊடுருவிச் செல்லும். அதனால் நீருக்கடியில் வாழும் உயிரினங்களின் அடிப்படை வாழ்வியல் பாதிக்கப்பட்டு அதன் நிலைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது.

2.8 கடல் நீர் மட்டம் உயர்ந்து செல்லல்.

பூகோள வெப்பமாதல் காரணமாக கடல் நீர் மட்டம் மிக வேகமாக உயர்வடைந்து செல்வது கடல்சார் சூழலுக்கு ஆபத்தாக அமைந்துள்ளது. அறிக்கைகளின் படி கடந்த இரண்டு தசாப்தங்களில் வருடாந்தம் கடல் நீர் மட்டம் உயர்வடைதல் வீதம் வருடத்துக்கு 0.13 அங்குலமாகக் காணப்பட்டது. இது கடந்த 80 வருடங்களுக்கு மேல் கடல் நீர் உயரும் மட்டத்தை விட இரண்டு மடங்கு அதிகமானதாகும். இதனடிப்படையில் கடல்சார் சூழல் மற்றும் கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பில் கடல் நீர் மட்ட உயர்வினால் ஏற்படும் பாதிப்புக்களை தெரியப்படுத்துவது அவசியம். கடல் நீர் மட்டம் உயர்வானது ஈரளிப்பு, நில வெள்ளப் பெருக்கு, அழிவு வேலைகள், விவசாய நிலங்கள் மாசடைதல் மற்றும் முக்கியமான தாவர வகைகள், மீனினங்கள், பறவையினங்களின் வாழிடங்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைகின்றது.

2.9 ஓசோன் கழிவுப் பொருட்கள்

ஓசோன் கழிவுப் பொருட்களான சீ.எப்.சீ. (CFC) மற்றும் கப்பல்களால் ஏற்படும் மாசுப் பொருட்கள் (மாசடைதல்) ஓசோன் படலத்தை அழிவுக்குட்படுத்தும். உலகம் பூராகவும்



கப்பல்களினால் கைவிடப்படும் ஓசோன் கழிவுகளாவன மெதில் குளோரோபோம், மெதில் ப்ரோமைட், ப்ரோமக்லூரோ, டிப்லூரோ, மீதேன் மற்றும் ப்ரோமோ ட்ரை ப்ளோரோ மீதேன் என்பவையாகும். மனிதர்களால் உருவாக்கப்படும் இந்த வாயுக்கள் ஓசோன் பாதிப்புக்கு காரணமாக அமையும். இது கடல் சார் சூழலுக்கும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும். கப்பல்களினால் வெளியேற்றப்படும் ஓசோன் கழிவுகள் தொடர்பில் மேலும் அறிய பின்வரும் வெப் தளத்தினை பார்வையிடவும்.
(https://www.Marineinsight.com/environment/what-are-ozone-depleting-substance-on-ship/)

**2.10** அகழ்வுகள் மூலமாக மாசடைதல்

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் கைத்தொழில் நடவடிக்கைகளினால் நடைபெறும் அகழ்வு நடவடிக்கைகள் கடல் போக்குவரத்து மற்றும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் விடயமாகும். பல வருடங்களாக கடல்சார் சூழலில் கொந்தளிப்புக்கள் ஏற்பட பிரதான காரணம் அகழ்வு நடவடிக்கைகளாகும். அகழ்வுகளினால் நீருக்கடியில் மூழ்கியிருக்கும் புதையல்களை அகற்றுவதனால் மண் கலவை வேறுபடுவதுடன் அதனால் உயிரினங்களினதும் அவற்றின் வாழ்விடமும் அழிவடைகின்றன. அதற்கு சமனான அழுக்குகள், அகழ்வு கழிவுகள், துகள்கள் ஒன்று சேர்ந்து நீர் மூலாதாரங்களை பாரியளவு அழிவடையச் செய்கின்றன. சமுத்திர சூழலிலான அகழ்வினால் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீருக்கடியிலான உயிரினங்கள் அழிவு சம்பந்தமாக இன்னும் விரிவாக அறியக் கிடைக்கும்.

2.11 நைட்ரஜன் ஒக்சைட்(**NOx**) மற்றும் சல்பர் ஒக்சைட் (**SOx**)

நைட்ரஜன் ஒக்சைட் மற்றும் சல்பர் ஒக்சைட் கப்பல்களினால் வெளிவிடப்படும் பிரதான மாசுப் பொருட்கள் இரண்டாகும். கடல்சார் சூழலுக்கும் ஓசோன் மண்டலத்துக்கும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. NOx மற்றும் SOx ஆகிய இரண்டும் புகை வடிவில் சூழலுக்கு வெளிவிடப்படும் தகன உற்பத்திகளாகும். 2005 இல் ஐரோப்பா முழுவதிலுமுள்ள நீராதாரங்கள் சல்பர் ஒக்சைட் (SOx) புகை 1.7 மில்லியன் தொன் மற்றும் சர்வதேச கப்பல்களின் நைட்ரஜன் ஒக்சைட் (NOx) 2.8 மில்லியன் தொன் கலந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கப்பல் புகை வெளியீட்டினைக் குறைப்பதற்கு கடுமையான சட்டங்கள் போடப்பட்டுள்ளன. எரிபொருள்களில் சல்பர் அடங்கியுள்ளது தொடர்பில் IMO தரத்திருத்தம் செய்யப்பட்டதுடன் சல்பர் வெளியீடு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாக பிரயாணம் செய்யும் கப்பல்களினூடாக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் சல்பர் 0.1% இற்கும் குறைவாக எரிபொருள் பாவிப்பதற்கு அனுமதியில்லை. அவ்வாறே சர்வதேச ரீதியாக பாவிக்கப்படும் சகல வகையான கடல் எரிபொருள் தொடர்பான சல்பர் அளவு 2020 தொடக்கம் 3.5% இலிருந்து 0.5% வரை உயர்வடைந்துள்ளது.
கடல்சார் சூழல் மாசடைவின் தீவிரத் தன்மையை நிருபிப்பதற்கு மேலுள்ள காரணிகள் மட்டும் போதாது. எவ்வாறாயினும் இந்த மாசடைவு காரணிகளினால் நாளுக்கு நாள் அதிகரிக்கும் அச்சுறுத்தலை மக்களுக்கு அறிவுறுத்துவது எமது எமது பணிவான / தாழ்மையான முயற்சியாகும்.
இவை சம்பந்தமாக சமூகத்திற்கு அறிவூட்டி எதிர்கால சமுதாயத்திற்கு கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய சிறந்த காலம் இதுவாகும்.







# 03

# நிறுவனத்தின் நல்லாளுகை அறிக்கை



# நிறுவனத்தின் நல்லாளுகை அறிக்கை

முறையான நிறுவன கட்டுப்பாடொன்றின் மூலம் தரப்பினர்களினி பெறுமதி மற்றும் அதிகாரசபையின் வளங்களை பாதுகாத்தல் மற்றும் தந்திரோபாய அபிவிருத்தியையை நோக்ககாக கொண்டு அதனை அடைந்து கொள்வதற்காக பலமான அடித்தளமொன்றை வழங்குகின்றது. பொது முயற்சிகள் மீதான குழுவின் சுயாதீனமான மீளாய்வாய்விற்கும் பொது மக்களினால் அதிகாரசபையின் செயற்பாடு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக தெரிவிக்கப்படும் விருப்பத்திற்கு இணங்குவதற்காக தாக்கமளிக்கும் பிரதான காரணியொன்றாகும். அவ்வாறே உயர் மட்டத்தில் இணைந்துகொள்வது நல்லாளுகையால் உறுதிப்படுத்தப்படும்.

## 3.1 நிர்வாக கட்டமைப்பு




## 3.2 அதிகாரசபையின் பணிப்பாளர் சபை

அதிகாரசபையின் வெற்றிக்கு பின்புலமாக உள்ள பலம் பணிப்பாளர் சபையாக இருப்பதுடன் உயர்ந்த தகைமைகளையுடைய அனுபவமுள்ள பணிப்பாளர் சபை உறுப்பினர்களுடன் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.பணிப்பாளர் சபையினால் அமைப்பின் தந்திரோபாயங்களை நிதி மற்றம் நன்மதிப்பு உட்பட நாட்டின் அனைத்து பிரஜைகளின் உயிர்களுக்கு தாக்கமளிக்கும் சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு எப்போதும் அர்ப்பணித்துள்ளது. இங்கு பணிப்பாளர் சபையின் ஒட்டுமொத்த இயலுமையையும் பயன்படுத்தி 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் மாசடைதலை தவிர்க்கும் சட்டத்தின் செயற்பாடுகளுக்கு இணங்க உயர் மட்டத்தில் நிறுவன நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பணிப்பாளர் சபையின் கடமைகள், பொறுப்புக்கள் குறித்த உள்ளடக்கம் உட்பட அவர்களின் பதவிகளின் பதவிக்காலத்தை வரைவிலக்கணப்படுத்துவது இங்கு முக்கியமானாதகும். மஹவலி மற்றும் சுற்றாடல் அமைச்சரினால் சபை நியமனம் செய்யப்படுவதுடன் பொது திறைசேரி மற்றும் பணிப்பாளர் சபையின் வரிசை அமைச்சின் பிரதிநிதியோருவர் கட்டயாமாகும். சபையின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர் நிறைவேற்றுப் பணிப்பாளர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக இருப்பதுடன் ஏனையவர் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் சபை உறுப்பினராவர்.



3.3 2018 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் பங்குபற்றுகை

பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் மாதாந்தம் நடத்தப்படுவதுடன், விசேட பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தேவைக்கு ஏற்ற கையில் நடாத்தப்படும் பணிப்பாளர்களின் பரிந்துரையின் பேரில் தேவையான சந்தர்ப்பங்களின் போது பதவிநிலை உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் சபையின் கூட்டங்களில் பங்குபற்றுவர். சபையின் கூட்டங்கள் முறையான நிகழ்ச்சி நிரல் ஒன்றன் பேரில் நடாத்தப்படுவதுடன் கூட்டங்களுக்கு முன்னர் நிறுவன முகாமையினால் பணிப்பாளர்களுக்கு விரிவான பின்னணித் தகவல்கள் வழங்கப்படும். ஆண்டினுள் 10 பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் நடைபெற்றதுடன் அதற்காக பணிப்பாளர்களின் பங்குபற்றல் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | பெயர் | பணிப்பாளர் சபையினால் தக்கவைக்கப்பட்ட பதவிநிலை | சபையின் கூட்டங்களின் எண். |
|---|---|---|---|
| 01 | திரு.ரியர் அட்மிரல் ரோஹண பெரேரா | தலைவர் (அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) - நிறைவேற்றுப் பணிப்பாளர் | 10/10 |
| 02 | திரு.பி.பீ.ரேனி பிரதீப் குமார் | பொது முகாமையாளர் நிறைவேற்றுப் பணிப்பாளர் | 10/10 |
| 03 | திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 10/13 |
| 04 | திரு.எ.டபிள்யு.செனவிரத்ன | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 03/10 |
| 05 | திரு.என். எல்.எம்.பீ.லியனகே | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 07/10 |
| 06 | திரு.மகேந்திர பெரேரா | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 02/10 |
| 07 | திரு.போ ஷித பெரேரா | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 09/10 |
| 08 | திருமதி சேபாலிக விக்ரமசிங்க | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 10/10 |
| 09 | கொமொடோர் பி.டி.எஸ்.டயஸ் | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 10/10 |
| 10 | என்.ஐ.எம். ரோசா | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 10/13 |
| 11 | பீ எம் டீ.பேமசந்திர | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 01/13 |



## பணிப்பாளர் சபையின் கடமைகள்

அதிகாரசபையின் வெற்றி மற்றும் நிலைபேறான தன்மைக்கு பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் அடிப்படையாக அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கே கையளிக்கப்பட்டுள்ளதுடன் தந்திரோபாய ஆலோசணைகள மற்றும் ஒட்டுமொத்த செயலாற்றல் தொடர்பில் சிறந்த தலைமைத்துவத்தை வழங்குதல் மற்றும் அத்தரப்பினரின் நன்மைமயை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் பணிப்பாளர் சபையின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும்.

3.4 பணிப்பாளர்களின் பங்குபற்றல

2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சூழல் மாசடைதலை தடுக்கும் சட்டத்தின் படி பணிப்பாளர்களை மீண்டும் சேவையில் அமர்த்தும் காலம் 3 வருடத்திற்கு மட்டுப்படுத்தப்படும். தீர்மானம் எடுப்பதற்கு முன்பு பணிப்பாளர் குழு நிறுவன முகாமையினூடகவும், வெளி தொழில் வல்லுனர்களுடாகவும் உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அதனிடையே நிறுவன முகாமையினூடக அவசியமான தகவல்களை வழங்க வேண்டும். இயக்குனர் குழு பொறுப்புகளை செயல்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான தகவல்களை தேவையான நேரத்தில் பணிப்பாளர் குழுவுக்கு வழங்குவது முகாமையின் பொறுப்பாகும். இயக்குனர் குழுவின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பொறுப்புடையவர்கள் இயக்குனர் குழுவினால் எந்தவொரு இயக்குனருக்கும் மற்றும் சேவையாளருக்கும் அங்கு அதிகாரங்களை அல்லது கடமைகளை வழங்கலாம். ஆத்துடன் நியமித்த ஒவ்வொரு பிரதிநிதிகளும் இயக்குனர் குழுவின் சாதாரண அல்லது விஷேடமான (உபதேசங்களுக்கு) அறிவுறுத்தல்களுக்கு அமைய அவருக்கு அல்லது அம்மணிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் அல்லது கடமையை நிறைவேற்ற வேண்டும். கொள்கைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்தல் உறுதிப்படுத்தலூடாக கூட்டுத்தாபத்தினுள் பயனுள்ள உள்ளக நிருவாக முறையொன்றை நடைமுறைப்படுத்த இயக்குனர் சபை முயற்சிக்கிறது. இயக்குனர் சபை அங்கத்தவர்கள் உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்களை மற்றும் முத்த/ மேல் நிருவாக மாவட்ட அனைத்து அங்கத்தவர்களுடனும் நேரடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கண்காணிப்பளர்களைப் பார்வையிட்டு சாதித்துக் கொள்வது இயக்குனர் சபையின் பொறுப்பாகும். இவற்றை செயற்படுத்தும் வேலையில் கண்காணிப்பளர்களின் உபாய மார்க்கங்களை சாதித்துக் கொள்வது அவர்களின் பொறுப்பாகும். அவை செயற்திறனாகவும் நிதிப் பெறுபேறுகளை மேற்பார்வையின் போதும் கண்காணிப்பளர்களின் சட்டதிட்டங்களுக்கமைய இயக்குனர் சபையின் பொறுப்பாகும். யாப்புகளின் தேவைப்பாடுகள் ஒழுக்க விழுமியங்களுக்கு அமைவாக இருப்பதும் அவர்களின் பொறுப்பாகும்.

மேற்குறிப்பிட்ட காரணிகளுக்கு மேலதிகமாக வருடாந்த நிதி அறிக்கை, வருடாந்த வரவு செலவுத் திட்டம், நிருவாக அறிக்கை செயற்பாட்டுத் திட்டம் மற்றும் நிதிச் செயற்பாடுகளை நிறைவேற்றுதலும் திருத்தம் செய்தலும் போன்றவற்றிற்கான அனுமதி வழங்கல் இயக்குனர் சபையின் கடமையாகும். அத்துடன் சேவைக்கு அமர்த்துதல், படையணியின் பதவி உயர்வுகள், பிரதான மூலதன செலவு, மற்றும் முதலீடுகளுக்குரிய அனுமதி வழங்குதல் இயக்குனர் சபையின் மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும்.

3.5 ஏனைய சபைகள்

இயக்குனர் சபையின் பிரதான செயற்பாடுகளுக்கு உப குழுக்கள் வகையில் கணக்காய்வு குழு பிரதான செயற்பாட்டை மேற்கொள்கிறது. அதற்கு மேலதிகமாக முகாமைத்துவக் குழு, பெறுகைகள் குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு ஆகிய 4 உப குழுக்கள் காணப்படுகிறது.

3.6 கணக்காய்வு குழு

கணக்காய்வு குழுவானது சுயாதீனமான குழுவாக இயக்குனர் சபையின் பொறுப்புக் கூறுகின்றது. இயக்குனர் சபையினால் நியமிக்கப்படும் ஏகாதிபத்தியல்லாத அங்கத்தவர்களினால் கணக்காய்வு குழு அமையும். கணக்காய்வு குழுவின் அதி முக்கிய செயற்பாடுகள் , கூட்டங்களின் எண்ணிக்கை, கூட்டங்களுக்கு அங்கத்தவர்களை பங்கேற்பு இந்த அறிக்கையில் கணக்காய்வு மற்றும் முகாமை குழு பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்கம் 25)

3.7 முகாமைத்துவக் குழு

முகாமைத்துவக் குழு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் அல்லது திணைக்கள தலைவர் உட்படுவதுடன் அவர்களில் ஒருவர் குழுவின் தலைவராக செயற்படுவார். குழுவின் தலைவரும் கூட்டங்களில் பங்குபற்றுவார். சுந்தர்ப்பங்களுக்குகேற்ப வருடத்தில் குழுக் கூட்டம் நடைபெறும்.

3.8 பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

உற்பத்தி, பொருட்கள் சேவைகள் மற்றும் வேலை கொள்வனவு தொடர்பிலான வழிமுறைகள் தேசிய பெறுகை முகவராண்மை மூலம் வெளியிடப்பட்டிருக்கிறது. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு உயர்வான நிதித் தன்மைகள் மற்றும் உயர் சேவைகள் வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நடைமுறைகளை உறுதிப்படுத்துதல், தாமதங்களைக் குறைப்பதற்கும் தேசிய பெறுகை பிரதிநிதி நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளை பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் நடைமுறைப்படுத்தப்படும். கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப பிரிவு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கவனத்தை ஈடுபடுத்தும் அதே வேளை பெறுகைகள் குழு மூலம் கொள்வனவு செய்யும் ஏனைய பிரிவுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தும். கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை பெறுகை குழுவின் பெறுமதியின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

1. அமைச்சின் பெறுகை குழு
2. திணைக்கள பெறுகை குழு

திணைக்கள பெறுகை குழு - பிரதான

திணைக்கள பெறுகை குழு – உப

அரசின் ஏனைய நிறுவனங்களுடனான தொடர்புகள்

அதிகாரசபையின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நிலைத்திருப்பது அங்குள்ள சகல பிரிவினர்களுடன் சுமூகமான, அர்த்தமுள்ள வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதனாலாகும். அதிகார சபை மற்றும் அதன் பிரிவினர்களிடையே அன்னியோன்ய உறவு விருத்தி செய்வதன் முக்கியத்துவம் தெரிந்திருப்பதுடன் இயக்குனர்களின் எண்ணப்படி அதிகார சபையின் இறுதி நிருவாகம் அரசாங்கமாகும். அதிகார சபையின் செயற்பாட்டு முகாமை செய்வது தொடர்பாக சூழல் பாதுகாப்பு அமைச்சு மற்றும் திறைசேரியுடன் நெருங்கி செயற்படுவதுண்டு.

அதிகார சபையின் பிரதான விரிவாக்கல்திட்டம், வேலை அட்டவணை தொடர்பில் அந்த நிறுவனங்களினால் நிதி வழங்குதல், ஆலோசணைகள், வழிகாட்டல்கள் பெற்றுக் கொடுக்கப்படும். தொலை தொடர்பு நடவடிக்கைகள் வாய் மொழி மூலமும் எழுத்து மூலமும் நடைபெறுவதுடன் தலைவர்/ பிரதானி அரசுடன் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் பிரதான தொடர்பு உத்தியோகத்தராக செயற்படுகின்றார். அதிகார சபையின் மூலம் சட்ட ரீதியாக அவசியமான உரிய ஏனைய தகவல்களை அரசுக்கு முடிந்தளவு ஆகக் கூடிய வகையில் வழங்கப்படுகி

3.9 உள்ளக கட்டுப்பாடு

அதிகாரசபை செயற்திறனாக செயற்படுவதற்கு பயனுள்ள உள்ளக முகாமை முறையொன்று அவசியமாகும். அதிகாரசபையின் சொத்துக்களைப் பாதுகாத்தல், உரிய பதிவுகளை மேற்கொள்வது, நம்பிக்கையான தகவல் வழங்குதலை உறுதிப்படுத்தல் இந்தப் படிமுறையின் நோக்கமாகும். உள்ளக முகாமையில் இடர் முகாமைத்துவம் மற்றும் நிதி, செயற்பாட்டு, இணக்கப்பாட்டு முகாமை உட்பட சகல வகையான நிருவாக முறைகளும் உட்படும். கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் உள்ளக முகாமை முறையின் இடர் முகாமைத்துவத்தில் குறிப்பிடப்பட்ட படி நிறுவனத்துக்கு தாங்கிக் கொள்ளக் கூடியளவு இடர் / ஆபத்து வட்டத்தினுள் முகாமை செய்யப்படும். அதன்படி உள்ளக முகாமைக்கு போதியளவு முகாமை நிதித் தகவல்கள் பிழையின்றியும் நிதி திட்டங்கள், ஊழல்கள் என்பவற்றிற்கு எதிராக சாதாரண முழுமை சான்றிதலொன்றை மாத்திரமே வழங்க முடியும்.

சகல உள்ளக முகாமை நடவடிக்கைகளும் அவற்றின் வினைத்திறன் அளவைத் திருத்தம் செய்வதற்கு உள்ளக முகாமை செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஆலோசணைகள் வழங்குவதற்கும் அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

3.10 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் தொழில்சார் நிபுணத்துவத்தை உடை கணக்காளரால் செயற்படுத்தப்படுகின்றது. உள்ளக முகாமையை அளவீடு செய்தல், இடர் உள்ள பகுதிகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் பூரணத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளல் தொடர்பில் கணக்காய்வு சபை/ குழுவினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு திட்டம் காணப்படும். மேலதிகமாக முகாமைத்துவத்திற்கு அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் விசேட பரிசோதனைகள் தொடர்பில் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிகார சபையின் செலவுகள் மற்றும் வருமானங்களின் பிரிவுகளுக்கு விடைகளுடன் கணக்காய்வு அதிபரின் அறிக்கை, கலந்துரையாடல் மற்றும் நடைபெற்ற உண்மையான விடயங்களுடன் கணக்காய்வு திட்டம் நேரத்துக்கு நேரம் திருத்தங்கள் செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்படும் அடுத்த செயற்பாடாகும்.

3.11 அலுவலக முகாமைத்துவம்

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் அதிகாரசபையினால் அனுமதிக்கப்பட்ட தந்திரோபாய திசைகள், நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல் நடைமுறைகள் அடிப்படையில் அதிகார சபையின் வழமையான



செயற்பாடுகள் தலைவர் அல்லது பொது கண்காணிப்பாளர் மூலம் செயற்படுத்தப்படும். அதிகாரி அல்லது கண்காணிப்பாளர் மூலம் செயற்பாடு மற்றும் நிருவாக நடவடிக்கைகள் பிரதான 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பிரதான அலுவலக செயற்பாடு மற்றும் பிராந்திய அலுவலக செயற்பாடுகள் ஆகும். பிராந்திய செயற்பாடுகள் மாவட்ட கடல் சார் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் செயற்படுத்தப்படுவதோடு அப் பிரதேசத்திற்குரிய பிரதி முகாமையாளர் அல்லது உதவி முகாமையாளரின் உதவி பெறப்படும். சிறந்த முகாமையொன்று தொடர்பில் தலைமை அலுவலகம் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரிவும் பிரதி பொது முகாமையாளர் அல்லது முகாமையாளர் ஒருவரினால் நிருவகிக்கப்படுவதோடு அதிகார சபையின் நாளாந்த செயற்பாடுகளுக்கு தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் உதவுவதாகும். நிறுவனத்தின் முகாமையாளர்கள் உரிய பிரிவுகளுக்கு தேவையான திறன்கள், அனுபவம் மற்றும் கல்வி, தொழில் தகைமையுடைய தொழில் வல்லுனர்களாவர்.

3.12 இணக்கம் மற்றும் வெளிப்படைத் தன்மை

உரிய சகல சட்டங்கள், பிரமாணங்கள், தரம், சிறந்த பாவனைக்கு ஏற்ப அதிகாரசபையின் வெற்றிக்கும் நிலைத் தன்மைக்கும் அத்தியவசியமாகும் அதிகாரசபையின் அலுவலக நிருவாக கட்டமைப்பானது 2003 ஆம் ஆண்டு இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம் மற்றும் அரச நிறுவனத்துறை வெளியிடப்பட்ட நல்லாளுகை தொடர்பான அலுவலக நிருவாகம் தொடர்பான சிறந்த பயிற்சி தொடர்பில் சேவையில் குறிப்பிடப்பட்டுள்ள உபாய முறைகளுக்கு அமைவாகும். உறுதியான அலுவலக நிருவகத்தை பாதுகாப்பது தொடர்பில் இயக்குனர் சபை அந்தத் தேவைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அர்ப்பணிப்புடன் இருக்கின்றது.

சகல செயற்பாடுகளினதும் வெளிப்படைத் தன்மையை நிலைப்படுத்துவதற்கு கண்காணிப்பாளர் அர்ப்பணிப்புடன் இருக்கின்றனர். அதிகாரசபை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLPASS/ SLFRS/ LKAS), பொறுப்புக்கூறல், சான்றுப்படுத்தல் தொடர்பில் உரிய ஒழுங்கு முறைகளுக்கு அமைய செயற்படுகின்றது. 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைய உள்ளக நிருவாக முறைகள் அதிகாரசபையின் நாளாந்த செயற்பாட்டு வேலைகளில் உட்படும். நிதிக்கூற்றுக்கள் வருடாந்தம் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதுடன் நிதிச் சட்டத்திற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளிவாரியான கணக்காய்வினை மேற்கொள்வார்.




10 THINGS YOU CAN DO FOR TRASH FREE SEAS
1
CAN IT
USE A TRASH CAN WITH LID
2
TAP IT
DRINK TAP WATER IN A REUSABLE BOTTLE
3
STOW IT
BE A GREEN BOATER WITH OCEAN CONSERVANCY'S GOOD MATE PROGRAM
4
BUTT IN
WRITE YOUR LEGISLATOR ASKING FOR POLICIES THAT ADDRESS OCEAN TRASH
5
REMOVE IT
CLEAN UP WITH THE INTERNATIONAL COASTAL CLEANUP WWW.SIGNUPTOCLEANUP.ORG
6
BUTT OUT
USE AN ASHTRAY SO CIGARETTE BUTTS DON'T REACH WATERWAYS AND THE OCEAN
7
RECYCLE IT
GO THE EXTRA MILE TO SORT AND SEPARATE ITEMS THAT CAN BE RECYCLED
8
REUSE IT
TAKE ALONG YOUR REUSABLE COFFEE MUG, PICNIC SUPPLIES OR SHOPPING BAG
9
REFUSE IT
BUY LESS TO REDUCE THE AMOUNT OF MANUFACTURED ITEMS WINDING UP AS TRASH IN THE OCEAN
10
REINVENT IT
SEND EMAILS TO COMPANIES ASKING THEM TO REDUCE PACKAGING AND CREATE NEW OCEAN-FRIENDLY MATERIALS

# 04

# பணிப்பாளர்களின் அறிக்கைகள்



# பணிப்பாளர்களின் அறிக்கைகள்

2008 இன் 35 ஆம் இலக்க கடல் சார் சூழல் மாசடைதல் தடுப்பு சட்டத்தின் 18 ஆம் பிரிவின் படி 2018 திசெம்பர் 31 இல் முடியும் வருடத்தில் கண்காணிப்பாளரால் கணக்காய்விற்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையை முன்வைப்பதற்கு கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை இயக்குனர் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதல் தடுப்பு சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரச ஒழுங்கு முறை அதிகாரசபையாகும். இது இயக்குனர் சபையொன்றினால் முகாமை செய்யப்படுகின்றது.

அதிகார சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 177, நாவல வீதி, கொழும்பு -05 எனும் முகவரியில் அமைந்துள்ளது. ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மூலம் வெளியிடப்படும் இலங்கை அரச கணக்கீட்டு நியமம் (SLPSASs) மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய வெளிப்பாடுகள் பிற்பாடான திருத்தங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படும்.

4.1 அடிப்படை செயற்பாடுகள்

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அடிப்படை செயற்பாடானது பயனுள்ள வகையில் ஒழுங்கு முறைகளை அமுல்படுத்துவதாகும். உரிய சர்வதேச சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தலும் அமுல்படுத்தலும், உரிய பிரிவினர் வளங்களையும் இணைத்தலும் அமுல்படுத்தலும், கடல் சார் சூழலை நிலையான முகாமை செய்தல் தொடர்பாக தற்கால, எதிர்கால சந்ததியினருக்கு நடைமுறை இலங்கையில் கடல் சார் சூழல் மாசடைதலைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், முகாமை செய்தலுமாகும்.

4.2 கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள்

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் கணக்காளரால் முறையாக கையொப்பமிட்டு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அரசியலமைப்பின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் காணப்படும் அதிகாரத்தின் பிரகாரம் கடல் சார் சூழல் மாசடைதல் தடுப்புச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டது.

4.3 நிதி அறிக்கை தொடர்பிலான இயக்குனர் சபையின் பொறுப்பு

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பில் இயக்குனர் சபை பொறுப்புக் கூறுவதுடன், அது அதிகாரசபையின் தற்போதய நிலமை குறித்து உண்மையானதும் நியாயமான நிலமையை வெளிப்படுத்தும். 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியம சட்டம் மற்றும்' 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டம் ஊடாக குறிப்பிடப்பட்ட படி இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம், நிதி செயலாற்றல் தொடர்பான அறிக்கை, உரிமை மாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டு கொள்கை குறிப்பு பக்கம் 74 தொடகம் 103 வரை குறிப்பிட்ட படி தயாரிக்கப்பட்டுள்ளதாக இயக்குனர்களின் கருத்தாகும்.

4.4 வருடத்தினுள் குறிப்பிடத்தக்க அளவு கணக்கீட்டு கொள்கை மற்றும் வேறுபாடுகள்

மீளாய்வாண்டில் திருத்தங்களுக்கு உட்பட்ட வருடத்தினுள் நிதிக்கூற்றுக்களை முன்வைக்கப்படுதல் தொடர்பாக, இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இனூடாக குறிப்பிட்டுள்ள படி முந்திய நிதியாண்டில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

4.5 வருமானம் மற்றும் மிகை / பற்றாக்குறை

| | 2018 | 2017 |
|---|---|---|
| வருமானம் | 240,476,579.82 | 173,474,838.59 |
| செலவினம் | 212,999,696.10 | 209,086,752.90 |
| மிகை (பற்றாக்குறை) | 27,476,883.72 | (35,611,914.31) |

ஒப்பீட்டு ரீதியான புள்ளிவிபரங்களுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகளின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளத.

4.6 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் 60 ஆம் பக்கத்தில் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 08 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

4.7 பணிப்பாளர் சபையின் வேதனங்கள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பணிப்பாளர்களின் சம்பளம் கீழே காட்டப்பட்டுள்ளது.

இந்த சம்பளமும் வேதனங்களும் 2015 இன் 01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது

4.8 அதிகார சபையுடனான இயக்குனர்களின் ஒப்பந்தம்
அதிகார சபையுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வது தொடர்பில் இயக்குனர்களின் நேரடி, மறைமுக செயற்பாடுகள் இல்லை.

4.9 இடர் முகாமைத்துவமும் உள்ளக நிருவாக முறையும்
இடர் முகாமைத்துவம் தொடர்பில் முழுப் பொறுப்பும் இயக்குனர் சபைக்கு உண்டு. இது தொடர்பில் இயக்குனர் குழுவினால் அதிகார சபையின் உள்ளக நிருவாக முறை தொடர்பில் விபரமாகவும் பரந்தளவிலுமான நிருவாக கட்டமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. இடர் முகாமை தொடர்பில் அதிகாரசபையினால் எடுக்கப்படும் குறித்த செயற்பாடு தொடர்பில் இடர் முகாமைத்துவ அறிக்கை பக்கம் 60 முதல் 65 வரை விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

4.10 மனித வளம்
அதிகார சபையின் செயற்பணி , தொலைநோக்கு என்பவற்றை நோக்கி செயற்படுத்தும் போது மனித வளத்தின் முக்கியத்துவத்தினை அதிகாரசபை அறிந்து வைத்துள்ளது. அதனடிப்படையில் அதிகாரசபையில் மனித வள மூலதனத்தை மேம்படுத்தவும் அலுவலக நோக்கம் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் அவர்களின் ஒத்துழைப்பை உயர் மட்டத்தில் பெற்றுக் கொள்வது தொடர்பில் பல்வேறு படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகாரசபையின் மனித வள கொள்கையூடாக சகல பதவிநிலை அலுவலர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சி மூலம் அவர்களின் அறிவு மற்றும் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்த போதிய சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுத்தலாகும். மனித வளத்தினுள் உயர் மட்டத்தில் தொழில்நுட்ப முகாமைத் திறன்களை உண்டென உறுதிப்படுத்துவதற்கு மனித வள முலதனத்தினை அபிவிருத்தி செய்வதற்கு அதிகாரசபையின் முதற்பணியாக காணப்படுகின்றது. இந்த அறிக்கையின் பக்கம் 26 முதல் 30 வரை மனித வள முலதன அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

4.11 தீர்க்கப்பட வேண்டிய பொறுப்பு
நிதிக் கூற்றுக்கள் திகதி வரையில் அதிகாரசபைக்கு எதிராக வழக்குகள் தொடரப்படவில்லை. அதன்படி நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையின் நிதி ஸ்திரத் தன்மைக்கு அல்லது எதிர்கால செயற்பாடுகளில் திரவ நிலைக்கு எந்த வித அழுத்தங்களுமில்லை.

4.12 சட்ட விதிகள் , பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்குதல்
உரிய சட்ட விதிகள் , பிரமாணங்கள் மீறப்படும் வகையில் அதிகாரசபை எந்த செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை.

4.13 சட்ட ரீதியான கொடுப்பனவு
உரிய ஒழுங்கு மற்றும் சட்ட பூர்வ அதிகார நிறுவனங்களால் கொடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட சகல சட்ட பூர்வ கொடுப்பனவுகளும் உரிய நிதி வளத்தைப் பயன்படுத்தி குறித்த காலத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாக இயக்குனர்களின் அனுபவங்களினதும் நம்பிக்கையினதும் உயர் மட்ட திருப்தியடையலாம்

4.14 நிதிக்கூற்றுக்கள்கையிடலுக்கு பின்னரான நிகழ்வுகள்
நிதி கூற்றுக்களில் திருத்தங்கள் செய்வதுடன் போதியளவு முக்கியத்துவமான எந்தவொரு நிகழ்வும் நிதிக் கூற்றுக்கள் திகதிக்கு பின்னர் நடைபெறவில்லை.

4.15 தொடர்ந்து இயங்குதல்
அதிகாரசபையின் தொலைநோக்கு, நோக்கங்களை அடைதல், செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் எதிர் காலத்தில் கடல் சார் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் இயக்குனர் சபையினால் அலுவலக திட்டம்/ செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்குகின்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளத.

4.16 கணக்காய்வாளர்களை நியமித்தல்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அதிகார சபையின் கணக்காய்வாளராவார். அவர் இலங்கை ஜனநாயக



சோசலிச குடியரசு அரசியலமைப்பு 154 ஆம் பிரிவின் படி முறையாக நியமிக்கப்பட்டுள்ளார். கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளருக்கான சம்பளம் கணக்காய்வு சட்டத்திற்கமைய வழங்கப்படும்.

4.17 கணக்காய்வாளருக்கான சம்பளம்

அதிகாரசபயால் கணக்காய்வுக் கட்டணங்களாக ரூபா 1,117,152 தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக கணக்காய்விற்காக செலுத்தப்பட்டுள்ளது. பணிப்பாளர்களால் அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் கணக்காய்வாளர்களுக்கு அதிகாரசசபையுடன் உடன்படிக்கை தொடர்பாக வேறு எந்த தொடரபொன்றோ கட்டுப்பாடொன்றோ இல்லை.

4.18 அலுவலக நிருவாக இயக்குனர்களின் அறிக்கை

1. இயக்குனர் சபையினால் கீழ்வரும் சான்றுறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அதிகாரசபை செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது உரிய சகல சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டுள்ளதுடன் உரிய சகல சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் எந்தவொரு செயற்பாட்டின் போதும் மீறப்படவில்லை.
2. அதிகாரசபையின் ஒப்பந்தங்களின் போது இயக்குனர்களின் சகல போதியளவு தொடர்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.
3. அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு உதவுதலில் உப திட்டங்களின் படி இயக்குனர் சபையினூடாக அதிகாரசபையின் அலுவலக/ நிருவாக திட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர் காலத்தில் செயற்பாடுகளை தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு அதிகாரசபைக்கு போதியளவு வளங்கள் உள்ளதாக திருப்திப்படக் கூடியதாகவுள்ளது. அதன் படி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்குதல் என்ற செயற்பாட்டு அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றது.
4. இயக்குனர்கள், நிதி, செயற்பாடு மற்றும் திறனான நிருவாகம் மற்றும் ஆபத்து முகாமை உள்வாங்கும் வகையில் உள்ளக நிருவாகம் தொடர்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் செயற்திறன் மற்றும் வெற்றிகரமாக பின்பற்றுதல் தொடர்பில் நியாயமான உறுதிப்படுத்தலொன்று பெறப்பட்டுள்ளது.
5. நிறுவகத்தின் நிருவாக சட்டதிட்டங்களுக்கு அமைவான செயற்பாட்டுக் கோவைகள் மற்றும் முறைகள் பாவனைகள் தொடர்பில் பக்கம் 18 தொடக்கம் 21 வரை அலுவலக நிருவாக அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

4.19 அறிக்கையின் உள்ளடங்களை ஏற்றல்

இயக்குனர் சபை இவ் ஆண்டறிக்கையின் உள்ளடங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த ஆண்டறிக்கை இயக்குனர் சபைக்காக கையொப்பம் இடப்படுகின்றது.

றியர் அட்மிரல் (இளைப்பாறிய) ரோஹன பெரேரா, *RSP, VSV, USP*
தலைவர்




PLASTIC BOTTLE PRODUCTION USES 151 BILLION LITRES OF OIL EACH YEAR
AROUND 40% OF BOTTLED WATER IS FILTERED TAP WATER
ONLY 1 IN 5 PLASTIC BOTTLES ARE RECYCLED
80% END UP IN LANDFILL OR THE OCEAN
IT TAKES 3 LITRES OF WATER TO MAKE
=
1 PLASTIC BOTTLE
100 MILLION PLASTIC BOTTLES USED WORLDWIDE EVERYDAY!
ENVIRONMENTAL ORGANISATIONS LIST PLASTIC AS THE NUMBER ONE THREAT TO OUR MARINE ENVIRONMENT
2.5 MILLION TONS OF CARBON DIOXIDE PRODUCED IN MANUFACTURING PLASTIC BOTTLES EACH YEAR
500 YEARS FOR PLASTIC TO DEGRADE
PLASTIC BOTTLE CONSUMPTION

# 05

# கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் அறிக்கை



# கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

கணக்காய்வு, முகாமைத்துவக் குழு மூன்று நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அதன் தலைவராக திறைசேரியின் பிரதிநிதி திரு எஸ்.ஐ.எம். ரோசா இருப்பதுடன், சுற்றாடல் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.ஆர்.ஆர்.எ.ஆர். ரூபசிங்க மற்றும் பணிப்பாளர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரான திரு. என்.எல்.எம்.பீ.லியனகே குழுவின் உறுப்பினர்களாக விளங்கினார்கள். மேலதிகமாக, சுற்றாடல் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு அத்தியட்சகரும், சுற்றாடல் அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளரும் பிரதான அவதானிப்பாளர்களாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களில் பங்கெடுத்தனர். கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவினால் வரவழைக்கப் பட்ட போது தெளிவுபடுத்தலை வழங்கு வதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் குழுவின் முன் பொது முகாமையாளரும், கணக்காளரும் அத்துடன் வேறு சம்பந்தப்பட்ட பதவிநிலைகளிலான அலுவலர்களும் ஆஜராகினர்.

உள்ளக கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்பாடு, நிதி, நிருவாக மற்றும் சட்ட பிரிவுகளை உள்ளடக்கி ஆண்டினுள் அமுல்படுத்தப் படுவதற்கு கணக்காய்வின் நோக்கெல்லை யில் உள்ள தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலதிகமாக, நிதிசார் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதுடன் இணைந்ததாக மதிப்பாய்வுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள தொழிற்பாடுகளையும், நிருவாக மற்றும், நிதிப் பிரிவுகளில் என்பவற்றின் பலவீனங்களையும் குறைபாடுகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது..

உள்ளகக் கணக்காய்வு அறிக்கை தொடர்பாக முகாமைத்துவத்துடன் கலந்துரையாடுவதன் மூலம் அவசியமான சீராக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டன. அதிகாரசபையின் உள்ளகச் சுற்று நிருபங்கள், நிதிப்பிரமாணங்கள், தாபன விதிக்கோவை மற்றும் வேறு ஒழுங்கு விதிகள் ஆகியவற்றின் பிரகாரம் அதிகார சபையின் அலுவல்கள் நடத்தப்படுகின்றன என்ற உறுதிப்பாட்டைப் பெறுவதற்காக கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், அதிகார சபையின் சொத்துக்களைப் பேணுதல் அத்துடன் பராமரித்தல் மற்றும் அதிகார சபையின் திரவநிலையைப் பராமரித்தல் ஆகியன உட்பட சகல நிதி, நிருவாக மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் இம் முயற்சியில் கணக்காய்வுக்கு உட்படுத்தப் பட்டன. கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட நிதிசார் முன்னேற்ற அறிக்கைகளை கணக்காய்வு, முகாமைத்துவக் குழு பரிசோதித்ததுடன், இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பில் தலைவருக்கும், பொது முகாமை யாளருக்கும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

கணக்காய்வு, முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தமது அவதானிப்புகளையும், முடிவுகளையும் மற்றும் பரிந்துரைகளையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்துடன் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு கலந்துரையாடியது. அதற்க மேலதிகமாக, உள்ளக கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப் படுத்தப்பட்ட உண்மைகளையும், மற்றும் கணக்காய்வு முறைமைகளின் செயற்றிறனையும் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு மதிப்பீடு செய் திருந்ததுடன், குறைபாடுகளை குறைத்துக்கொள்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்களையும், வழிகாட்டல் களையும் வழங்கியது. ஆண்டின் போது ஐந்து தடவைகள் கூட்டத்தைக் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2018 இல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் மீதான அறிக்கைகள்

| | பெயர் | தணிக்கை மற்றும் மேலாண்மைக் குழுவி ன் நிலை | தணிக்கை மற்றும் மேலாண்மைக் குழுவின் கூட்டங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | திரு. எஸ்.ஐ.எம்.ரோசா | தலைவர் (தேசிய பட்ஜெட் துறை) | **05/05** |
| 02 | திரு. என்.எல்.எம்.லியனக | உறுப்பினர் (இலங்கை நாடாளுமன்றம்) | **03/05** |
| 03 | திரு. ஆர்.ஏ.ஆர்.ஆர். ஷரூபசிங்க | உறுப்பினர் (மகாவலி வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம்) | **03/05** |
| 04 | திரு. கே.கே.எஸ்.ஜயகோடி | பார்வையாளர் - ஆடிட்டர் ஜெனரல் துறை (தணிக்கை கண்காணிப்பாளர்) | **05/05** |
| 05 | திருமதி. இ.டி.குமுடு | பார்வையாளர் (மகாவேலி வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம்) | **04/05** |
| 06 | திரு. ஏ. பி. உதனா | கன்வீனர் (கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை ) | **05/05** |


what are
marine
protected areas
?
Over 100 years ago, the United States protected our natural wonders by creating National Parks. Now, California is doing the same for our ocean through the Marine Life Protection Act. Marine protected areas are underwater parks where sea life can thrive.
Who decided where to put MPAs?
Areas were selected based on the best available science and input from the community. The process was a collaboration between divers, fishermen, conservationists, and members of the public. Recommendations were reviewed by experts before adoption by California's Fish and Game Commission.
What can I do in MPAs?
Like National Parks, MPAs are open to the public for education, research and appreciation. They offer great opportunities for diving, kayaking, surfing and wildlife viewing.
How do MPAs work?
MPAs support the whole web of life. They help restore marine ecosystems so that future generations can enjoy healthy oceans.
What are National Marine Sanctuaries?
National Marine Sanctuaries, a type of MPA, work to protect habitats and biological communities by prohibiting oil exploration, drilling, discharge and other harmful activities.
Where can I find California's MPAs?
There are 124 MPAs in California's statewide coastal network. These MPAs extend from Oregon to the Mexican border.

# 06

# மனித மூலதன அறிக்கை



# மனித மூலதன அறிக்கை

ஊழியர்கள் தொடர்பை கட்டியெழுப்புதலும் பங்குபற்றலை அதிகரித்தலும்

அதிகாரசபையின் செயற்பாடுகளின் வெற்றிக்கு ஊழியர் தொடர்பு மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய இரண்டையும் பிரதானமானவையாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி நம்பிக்கை மற்றும் பரஸ்பர மதிப்பு அடிப்படையில் எமது மக்களுடன் உறுதியான உறவை கட்டியெழுப்புவது தொடர்பாக அதிகாரசபை பூரண ஈடுபாட்டுடன் இருப்பதுடன், திறந்த மற்றும் வெளிப்படையான தொடர்புகளை பேணுவதற்கும் மற்றும் எமது உத்தியோகத்தர்களுடன் நிரந்தர தொடர்புகளை வளர்ப்பதற்கும் முயற்சி எடுக்கப்படுகின்றோம்.

ஊழியர் தொடர்பை மேற்கொள்ளும் போது மனிதவள திணைக்களம் பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இது தொடர்பான பிரதான காரணியாவது அதிகாரசபையின் மொத்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாக ஊழியர்களின் தேர்ச்சி மற்றும் நம்பிக்கையை அபிவிருத்தி செய்வது தொடர்பான அதிகாரசபையின் மனிதவள திட்டமாகும்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் மனிதவள அபிவிருத்திக் கொள்கை பல்வேறு மட்டங்களின் அடிப்படை நியதிகளுக்கமைய அடிப்படையிலான அபிவிருத்தியை மேற்கொண்டு எமது சகல தரத்தினையுடைய உத்தியோகத்தர்களின் சிறந்த கூட்டிணைப்பு காணப்படுவதாக உறுதிப்படுத்துகின்றது. எமது ஊழியர்களுக்கு வளங்கள், சந்தர்பங்களுக்கு சமனான முன்மாதிரிகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஒவ்வொரு ஊழியரையும் எமது குழுவின் பங்காளியாவதற்கு அவர்களின் அதிகூடிய பங்களிப்பை பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. அவ்வாறு செய்வது தொடர்பில் நாம் உயர் வேலை சாதனையுடன் கூடிய கலாச்சாரமொன்றில் நம்பிக்கை வைப்போம். அங்கு எல்லா குழுக்களின் அங்கத்தவர்களும் தமது வேலை நோக்கத்தை அதிகார சபையின் நோக்கத்துடன் ஒப்பீடு செய்து கொள்வது தொடர்பாக முனைவதற்கு தனிப்பட்ட ரீதியில் அர்ப்பணிப்பதாக நாங்கள் எதிர்பார்ப்போம்.

புதிய ஆட்சேர்ப்பு 2018
வயது மற்றும் ஆண், பெண் (GRI401-1)

| வயது பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 18-20 | 0 | 0 | 0 |
| 21-30 | 6 | 3 | 9 |
| 31-40 | 4 | 2 | 6 |
| 41-50 | 2 | 0 | 2 |
| 50 இற்கு மேல | 0 | 0 | 0 |
| மொத்தம் | 12 | 5 | 17 |
| சதவீதம் | 70.58% | 29.42% | 100% |

கிரயம் 2018 2018
வயது மற்றும் ஆண், பெண் (GRI401-1)

| வயது பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 18-20 | 0 | 0 | 0 |
| 21-30 | 5 | 1 | 6 |
| 31-40 | 3 | 1 | 4 |
| 41-50 | 0 | 0 | 0 |
| 50 இற்கு மேல் | 0 | 0 | 0 |
| மொத்த கூட்டுத்தொகை | 8 | 2 | 10 |
| சதவீதம்%) | 80% | 20% | 100% |

சேவை தொடர்பு 2018

மீண்டும் சேவைக்கு சமூகமளித்தல் மற்றும் தொடர்தல்(பிரசவ விடுமுறை)

| விபரம் | 2018 | 2017 |
|---|---|---|
| பிரசவ விடுமுறை பெற தகுதி உடைய ஊழியர்களின் எண்ணிக்கை | 48 | 55 |
| பிரசவ விடுமுறை பெற்றுக்கொண்ட ஊழியர்களின் எண்ணிக்கை | 8 | 12 |
| பிரசவ விடுமுறை பெற்ற பின் சேவைக்கு சமூகமளித்தவர்கள் | 6 | 12 |
| பிரசவ விடுமுறை பெற்ற பின் 12மாதத்தினுள் சேவையை தொடர்ந்தவர்களின் எண்ணிக்கை | 6 | 8 |
| மீண்டும் சேவைக்கு சமூகமளித்தவர்களின் சதவீதம் | 75% | 100% |
| சேவையை தொடர்ந்தவர்களின் சதவீதம் | 75% | 66.67% |

ஊழியர்களின் சாதாரண பயிற்சிக்காலம் (GRI 104-1)

| விபரம் | 201 8 | 201 7 |
|---|---|---|
| ஊழியர் ஒருவரின் சாதரண பயிற்சிக்காலம் | 25.07 | 34.88 |
| ஊழியர் ஒருவரின் சாதரண பயிற்சிக்காலம் - ஆண் | 25.49 | 45.10 |
| ஊழியர் ஒருவரின் சாதரண பயிற்சிக்காலம் - பெண் | 24.81 | 23.20 |

ஊழியர் எண்ணிக்கை 2018 (GRI 405-01)

| வயது பிரிவு | சிரேஷ்ட முகாமையாளர்கள் | | நடுத்தர முகாமையாளர்கள் | | கீழ்மட்ட முகாமையாளர்கள் | | உதவி கடல்சார் சூழல் அதிகாரி | | முகாமை உதவியாளர் | | வேறு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 18 -20 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 21 -30 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 9 | 9 | 4 | 14 | 12 | 1 |
| 31 -40 | 0 | 0 | 3 | 1 | 11 | 2 | 5 | 13 | 3 | 6 | 27 | 0 |
| 41 -50 | 3 | 0 | 4 | 0 | 0 | 4 | 0 | 0 | 3 | 1 | 34 | 0 |
| 50இற்கு மேல | 1 | 1 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 12 | 0 |
| மொத்தம் | 4 | 1 | 7 | 4 | 11 | 6 | 14 | 22 | 10 | 21 | 85 | 1 |
| சதவீதம் [%] | 2.1 | 0.5 | 3.8 | 2.1 | 5.9 | 3.3 | 7.6 | 11.9 | 5.3 | 11.3 | 45.7 | 0.5 |

சேவையின் தன்மை (GRI 102-8)

| சேவையின் தன்மை | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| நிலையான ஒப்பந்தம் | 2 | 0 | 2 | 1 | 0 | 1 |
| நிலையான | 102 | 37 | 139 | 101 | 41 | 142 |
| துகுதிகாண் | 30 | 15 | 45 | 37 | 7 | 44 |
| பயிற்சி | 2 | 8 | 10 | 1 | 9 | 10 |
| மொத்தம் | 136 | 60 | 196 | 140 | 57 | 197 |

மாகாண மட்டத்திலான ஊழியர்கள் விபரம் (GRI – 102-8)

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| தென் மாகாணம் | 03 | 35 | 9 | 44 | 38 | 6 | 44 |
| மேல் மாகாணம் | 03 | 63 | 37 | 100 | 59 | 33 | 92 |
| வடமேல் மாகாணம் | 01 | 10 | 4 | 14 | 8 | 4 | 12 |
| வட மாகாணம் | 02 | 5 | 3 | 8 | 15 | 3 | 18 |
| கிழக்கு மாகாணம் | 03 | 18 | 2 | 20 | 20 | 2 | 22 |
| மொத்தம | 12 | 131 | 55 | 186 | 139 | 48 | 188 |

திறன் மட்டத்திலான சுருக்கம் 2018

| | திறன் மட்டம் | கலந்து கொண்ட எண்ணிக்கை | பயிற்சி மணிநேரம் |
|---|---|---|---|
| 1 | செயற்பாடு | 24 | 1224 |
| 2 | ஆபத்து மற்றும் அனுகூலம் | 1 | 864 |
| 3 | நிதி மற்றும் கணக்கீடு | 28 | 240 |
| 4 | மனித வள முகாமைத்துவம் | 0 | 0 |
| 5 | தினசரி மற்றும் நல்லால்கை | 13 | 208 |
| 6 | ஏனைய தொழில்நுட்ப நிகழ்ச்சி | 10 | 920 |
| 7 | தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் (திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி.`தந்திரோபாய முகாமை) | 74 | 1776 |
| 8 | ஏனைய தொழில்நுட்பமல்லாத திறன | 0 | 0 |
| | மொத்தம் | 150 | 5232 |

ஆண் பெண் அடிப்படையிலான சாதாரண பயிற்சிக்காலம் (GRI 404 2/3)

| திறன் மட்டம் | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| செயற்பாடு | 21 | 3 | 24 | 48 | 21 | 69 |
| ஆபத்து மற்றும் அனுகூலம் | 1 | 0 | 1 | 5 | 0 | 5 |
| நிதி மற்றும் கணக்கீடு | 12 | 16 | 28 | 4 | 2 | 6 |
| மனிதவள முகாமைத்துவம் | 0 | 0 | 0 | 1 | 6 | 7 |
| சட்ட மற்றும் நல்லாலுகை | 4 | 9 | 13 | 0 | 0 | 0 |
| ஏனைய தொழில்நுட்ப நிகழ்ச்சி | 5 | 5 | 10 | 0 | 0 | 0 |
| தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் (திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி.`தந்திரோபாய முகாமை ) | 37 | 37 | 74 | 10 | 15 | 25 |

ஊழியர்களின் திறன் அபிவிருத்தி

அதிகாரசபையை எதிர்காலம் நோக்கி கொண்டு செல்வது தொடர்பாக எமது அதிகாரசபை தொடர்ந்தும் ஊழியர்களின் திறன், நிபுணத்துவம் மற்றும் சிந்தனையை அபிவிருத்தி செய்துகொள்வது தொடர்பாக ஏற்பாடுகள் செய்துள்ளது. அதன்படி எமது ஊழியர்கள் தொடர்பில் வருடத்தினுள் கீழுள்ள பயிற்சிகளுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

## உள்ளூர் பயிற்சி 2018

| | Name | Designation | Course | Duration | Institute |
|---|---|---|---|---|---|
| 1 | B S K Ekanayake | Media Officer | Digital Photograpy Course | 09 January 2018 to 8 Days | CameraLK academy (Pvt) Ltd |
| 2 | All staff | First Group - 24 officers | Training programme for staff motivation, team work and development | 2018 March 05- 07 | Sri Lanka Foundation |
| | | Second Group - 26 officers | | 2018 March 08 - 10 | |
| | | Thired Group - 24 officers | | 2018 March 12- 14 | |
| 3 | A J M Gunasekara | Manager (Operation) | Pacific Partnership 2018 – HADR Exercise | 2018 May 02 to 07 | Disastre Management Centre |
| | T Shripathy | Assistant Manager (O/S)/(North/ Estern) | | | |
| | H T N I Piyadasa | Assistant Manager (Province) | | | |
| 4 | T Shripathy | Assistant Manager (O/S)/(North/ Estern ) | "Tanker Basic Safety" Workshop | 2018 June 11 to 15 | CINEC Campus |
| | L L R B Silva | Manarine Environment Officer | | | |
| | M T K Delpachithra | Manarine Environment Officer | | | |
| | T D Ramasinghe | Assistant Marine Environment Officer | | | |
| | K H K Prebasara | Assistant Marine Environment Officer | | | |
| | E P D N Thirakarathne | Assistant Marine Environment Officer | | | |
| | H P N K Senarathne | Assistant Marine Environment Officer | | | |
| | Y P Kumara | Assistant Marine Environment Officer | | | |
| 5 | N A Majeed | IT Officer | "Microsoft Certified Solution Associate" Workshop | 03 months | Turnkey IT Campus |
| 6 | T G I P Amaranayake | Assistant Manager (Operation) | Disaster Management Taining programe | 10 Days | Disastre Management Centre |
| 7 | Dr.P B T P Kumara | General Manager | Awareness programe for new Audit Act | 2-Oct-18 | Ministry of Mahaweli Development and Environment |
| | A Kariyawasam | Manager (Legal) | | | |
| | A J M Jagath | Manager (Operation) | | | |
| | D R C Jayawardana | Accountant | | | |
| | H T N I Piyadasa | Assistant Manager (Province) | | | |
| | R N Priyadarshana | Assistant Manager (Ship Servay) | | | |
| | T S Ranasinghe | Assistant Manager (W & NW) | | | |
| | S M C Kumarage | Assistant Manager(Administration) | | | |
| | K P K I U Fernando | Assistant Manager (Planning) | | | |
| | W A P Udana | Internal Auditor | | | |

| | Name | Designation | Course | Duration | Institute |
|---|---|---|---|---|---|
| 8 | W A P Udana | Internal Auditor | Internal Audit Training Progrem | 26 October to 27 October 2018 | Institute of Government Accountants |
| | R P D H C Rajapaksha | Management Assistant | | | |
| 9 | H P N K Senarathne | Assistant Marine Environment Officer | Training Program on Environmental Impact Assessment (EIA) | 29 November to 01 December 2018 | Institute of Environmental Professionals of Sri Lanka |
| 10 | S M C Kumarage | Assistant Manager (Administrtaion) | Awareness programe for new Audit Act | 29-Nov-18 | Sri Lanka Foundation |
| | G P Nilanjani | Administrative Officer | | | |
| | A M Gammampila | Assistant Marine Environment Officer | | | |
| | H P T U Yasarathne | Assistant Marine Environment Officer | | | |
| | T M H D Thennakoon | Assistant Marine Environment Officer | | | |
| | A A D Silva | Management Assistant | | | |
| | M M D Muramudali | Management Assistant | | | |
| | S P S Bandara | Managerment Assistant (Grade II) | | | |
| | N K I L Wijeyawardana | Management Assistant | | | |
| | R P D H C Rajapaksha | Management Assistant | | | |
| | H M M Umendra | Management Assistant | | | |
| | S D G P Sanjeewa | Managerment Assistant (Grade II) | | | |
| | U L J A Priyanwada | Management Assistant | | | |
| | K A N Darshani | Management Assistant | | | |
| 11 | S M D Athukorala | | Workshop on Financial Management | 29-Nov-18 | Sri Lanka Foundation |
| | B N D Perera | Management Assistant | | | |
| 12 | H A S D Perera | Assistant Marine Environment Officer | International Workshop on Green Enterprinuship | 2018 December 07 to 08 | Ministry of Mahaweli Development and Environment |
| | T B K Sachithra | Assistant Marine Environment Officer | | | |
| | I D Ranasinghe | Assistant Marine Environment Officer | | | |
| | A M Gammanpila | Assistant Marine Environment Officer | | | |
| | P L I G M Cooray | Assistant Marine Environment Officer | | | |
| | C V Kularajasingam | Assistant Marine Environment Officer | | | |
| | R A C Nisansala | Assistant Marine Environment Officer | | | |

| | Name | Designation | Course | Duration | Institute |
|---|---|---|---|---|---|
| 13 | N A Majeed | IT Officer | IT Procurement Management | 2018 December 18 to 19 | Distance Learning Centre LTD |
| 14 | D R C Jayawardana | Accountant | Awareness programe of establishment code | 2018 December 27-28 | Sri Lanka Foundation |
| | W A P Udana | Internal Auditor | | | |
| | P R S A Abeyrathne | Assistant Marine Environment Officer | | | |
| | H A I Suranga | Secretary | | | |
| | R A U Rangani | Management Assistant | | | |
| | B G N P Perera | Management Assistant | | | |
| | K A N Darshani | Management Assistant | | | |
| | M M J D Manthilaka | Management Assistant | | | |
| | H A D N Gunawardana | Management Assistant | | | |
| | G W C M Karunarathne | Management Assistant | | | |
| | P K R Sampath | Management Assistant | | | |
| | R P D H Rajapaksha | Management Assistant | | | |
| | K G D K Dissanayake | Management Assistant | | | |

| | Name | Designation | Course | Duration | Institute |
|---|---|---|---|---|---|
| 1 | Dr. P.B.T.P.Kumara | General Manager | 2018-04-05 to 06 | Regional Workshop Strengthen capacity for Marine Litter Management in the South Asian Seas (SAS) Region | India |
| | A J M Gunasekara | Manager (Operation) | 2018-04-05 to 12 | | |
| 2 | Rear Admiral Rohana Perera | Chairman | 2018-04-09 to 13 | 72th Session of Marine Environmental Protection Committee (MEPC) Meeting | London |
| 3 | Dr. P.B.T.P.Kumara | General Manager | 2018-05-28 to 2018-06-01 | Ad- Hoc- Open – Ended Expert Group on Marine Litter and Micro Plastic | Kinniya |
| 4 | R M M P Rathnayake | Assistant Marine Environment Officer | 2018-07-19 to 20 | 5th Meeting of the Commission on the limits of the continental shelf (CLCSO) | NewYork |
| 5 | M M Subasinghe | Assistant Marine Environment Officer | 2018-06-25 to 07-27 | Nominations for the ICM (Integrated Coastal Management) Training of Trainers Course 2018 | Thailand |
| 6 | H R D Subhashinei | Marine Environment Officer | 2018-07-9 to 13 | Sustainable Marine Resources: Enhancing Biodiversity in Coastal Waterways | Singapour |
| 7 | Dr. P.B.T.P.Kumara | General Manager | 2018-10-22 to 26 | 73rd Meeting of the Marine Environment Protection Committee (MEPC) Meeting | London |
| 8 | T Shripathy | Assistant Manager (O/S)/(North/ Estern) | 2018-8-29 to 2018-12-14 | Critical Needs Programme | NewYork |
| 9 | H T N I Piyadasa | Assistant Manager (Province) | 2018-11-27 to 29 | Sub Regional Workshop on Effective Implementation of security measure relevant to Maritime facilities and off-shore platforms | London |
| 10 | T S Ranasinghe | Deputy Manager (W&NW) | 2018-11-25 to 2018-12-03 | Workshop on Ocean Acidification and climate change between china and south Asian countries & training for ocean acidification monitoring and research | China |
| 11 | Dr. P.B.T.P.Kumara | General Manager | 2018-12-03 to 07 | The second meeting of the Ad HOC Open-Ended Expert Group on maritime litter and microplastics | Swisland |


THE
IMPORTANCE
OF
CORAL
REEFS
HABITAT FOR
MARINE LIFE
COASTAL PROTECTION
FOOD RESOURCE
ECONOMIC VALUE

# 07

# தொழிற்பாட்டிலான செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு



# தொழிற்பாட்டிலான செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு

1. கடல்சார் சூழல் கட்டுப்பாட்டு முறைமையியல்களை மேம்படுத்தல்

1.1 கடல் நீர் தரத்தைச் சோதிக்கும் செயற்றிட்டம்

கரையோர மாவட்டங்களில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் தாபிக்கப்பட்ட பிராந்திய அலுவலகங்கள் தெரிவுசெய்யப்பட்ட சமுத்திர குளிக்கும் இடங்களில் நீரின் தரத்தைக் கண்காணிக்கும் செயற்றிட்டத்தை மேற்கொள்கின்றது. பௌதீக, இரசாயன மற்றும் உயிரக அளவீடுகள் மீதான அடிப்படையில் தீழ்ப்புக்களின் தரத்தையும் அளவையும் அடையாளங் காண்பதற்கு நீர் மாதிரிகள் சோதிக்கப்படுகின்றன. இங்கு பௌதீக அளவீடுகளாக வெப்பநிலை (Temperature) கலங்கற்றன்மை (Turbidity)மற்றும் கடத்துதிறன் (Conductivity) ஆகியன சோதிக்கப்படு கின்றன. அதேவேளை அமிலத்தன்மை/ நச்சுத்தன்மை, நைத்திரேற் அத்துடன் பொஸ்பேற் அடக்கம் ஆகியன இரசாயன அளவீடுகளாக விளங்குகின்றன. கரைந்த ஒட்சிசன், (Dissolved Oxegen)உயிரக ஒட்சிசன் கிராக்கி, (Bio Oxygen Demand)உயிரக இரசாயன கிராக்கி (Chemical Oxygen Demand)மற்றும் மொத்த கோலிபோர்ம் பக்டீரியா, மல விடயத்தில் கோலிபோர்ம் பக்டீரியா (மல கோலிபோர்ம்) (Fecal Coliform)ஆகியனவற்றின் அளவு போன்ற பௌதீக இரசாயனங்கள் நீர் மாதிரிகளைப் பயன்படுத்தி மாதாந்தம் கணக்கிடப்படுகின்றன.

அட்டவணை 1: நீரின் தரம் சோதிக்கப்பட்ட குளிக்கும் இடங்கள்

| பிராந்திய அலுவலகம் | சோதிக்கப்பட்ட கடல் குளிக்கும் இடங்கள் |
|---|---|
| களுத்துறை | மொறகல்ல |
| காலி | உணவட்டுன |
| மாத்தறை | மிரிஸ்ஸ |
| அம்பாந்தோட்டை | பிஜன் கோஸ்ற் |
| அம்பாறை | அறுகம்பே |
| மட்டக்களப்பு | பாசிக்குடா |
| சிலாபம் | சிலாபம் கடற்கரை பூங்கா, வென்ன |
| நீர்கொழும்பு | நீர்கொழும்பு கடற்கரை பூங்கா |
| கொழும்பு | கல்கிஸ்ஸ, துறைமுக நகரம், வெள்ளவத்த |
| திருகோணமலை | மார்பிள் கடற்கரை, புறா தீவு, நிலாவெளி கடற்கரை, |
| யாழ்ப்பாணம் | சாட்டி, தொண்டைமனாறு கசூரீனா, |
| மன்னார் | பேசாலை, கீரி |
| | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சாராமாறிகளுக்கு நீர் மாதிரிகளைச் சோதிப்பது குறுகிய கால நீரின் தரத்தின் மாற்றங்களை ஆய்வதில் மிகவும் முக்கியமான அதேவேளை, மல விடயத்தினால் நீரின் தீழ்ப்பினை அளவிடுவதற்கான பிரதான சாராமாறிகளான மொத்த கோலிபோர்ம், மல கோலிபோர்ம் மற்றும் E.கோலிபோர்ம் கணக்கெடுப்பு ஆகியவற்றுக்கு பரிசோதிப்பதும் முக்கியமானதாகும். ஏனெனில் பக்டீரியாவை விளைவிக்கும் நோயின் பிரசன்னத்திற்கான சாத்தியக்கூற்றினைக் காட்டுவதற்கான தெளிவான காட்டியொன்றாக இது விளங்குகின்றது. இந்த நீரின் தர சோதனைகளிலிருந்து பெறப்பட்ட தரவுகள் குளிக்கும் இடங்களை மேம்படுத்து வதற்கும் அத்துடன் மக்களின் விழிப்பியலை உயர்த்துவதற்கும் முக்கியமாக உள்ள அதேவேளை, சமுத்திர குளிக்கும் இடங்கள் இந்த சோதனைகளின் முடிவுகளின் பிரகாரம் மதிப்பிடப்படுகின்றன.

அட்டவணை 2: குளிக்கும் இடங்களின் நீரின் தரக் காட்டி

| தரம் | காட்டி | வகுப்பு |
|---|---|---|
| மிக மோசம் | <45 | vi |
| மோசம் | 46 - 60 | v |
| சராசரி | 61 - 69 | iv |
| நன்று | 70 - 79 | iii |
| மிக நன்று | 80 - 90 | ii |
| சிறப்பு | 91 - 100 | i |

| மாவட்டம் | கடல்சார் குளிக்கும் இடங்கள் | காட்டியின் பெறுமதி | தரம் | வகு ப்பு |
|---|---|---|---|---|
| களுத்துறை | மொரகால்ல | 87.26 | மிக நன்று | i |
| காலி | உணவட்டுன | 78.94 | நன்று | iii |
| மாத்தறை | மிரிஸ்ஸ | 100 | சிறப்பு | i |
| அம்பாந்தோட்டை | தங்காலை | 54.23 | பலவீனம் | v |
| அம்பாந்தோட்டை | கோவிச்சும | 100 | சிறப்பு | I |
| அம்பாறை | அருகம்பே | 100 | சிறப்பு | I |
| மட்டக்களப்பு | பாசிக்குடா | 100 | சிறப்பு | I |
| சிலாபம் | சிலாபம் கடற்கரை பூங்கா | 67.48 | சாதாரணம் | iv |
| சிலாபம் | வெண்ணப்புவ | 78.43 | மிக நன்று | iii |
| நீர்கொழும்பு | நீர் கொழும்பு கடற்கரை பூங்கா | 32.13 | மிகவும் பலவீன் | vi |
| கொழும்பு | கல்கிஸ்ஸ | 36.21 | மிகவும் பலவீனம் | vi |
| கொழும்பு | வெள்ளவத்த | 26.53 | மிகவும் பலவீனம் | vi |
| கொழும்பு | துறைமுக நகரம் | 31.3 | மிகவும் பலவீனம் | iv |
| திருகோணமலை | மார்பிள் கடற்கரை | 100 | சிறப்பு | i |
| திருகோணமலை | திருகோணமலை | 100 | சிறப்பு | i |
| திருகோணமலை | நிலாவெளி கடற்கரை | 100 | சிறப்பு | i |
| திருகோணமலை | புறா தீவு | 100 | சிறப்பு | i |
| யாழ்ப்பாணம் | சாட்டி, கசூரீனா, | 100 | சிறப்பு | i |
| மன்னார் | பேசாலை | 22.4 | மிகவும் பலவீனம் | i |
| மன்னார் | கீரி | 86.7 | மிகவும் பலவீனம் | vi |

மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் மீதான அடிப்படையில், நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கு கடல்சார் மாசடைதலைக் குறைப்பதற்காக பலதரப்பட்ட செயற்றிட்டங்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை நடத்தியுள்ளது. மீன்பிடித்தொழில் கைத்தொழிலுடன் இணைந்துள்ள தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கான தேசிய கொள்கை களையும், உபாயங்களையும் மற்றும் செயல் திட்டத்தையும் தயாரிப்பது, கடலில் கழிவை ஒழிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல், அத்தகைய செயல் திட்டங்களாகும்.

அட்டவணை 4 2018 ஆம் ஆண்டிற்காக கழிவுப்பொருள் கொட்டுதல் சேவையை வழங்குவதற்கு அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்

| இலக்கம் | பதிவிலக்கம் | நிறுவனம் |
|---|---|---|
| 1 | 2018/WRS/01 | டீ.என்.மெரின் சேர்விஸ் |
| 2 | 2018/WRS/02 | மெரிகொ லங்கா |
| 3 | 2018/WRS/03 | மல்கா சிலோன் ஷிப்பிங் சேர்விஸ் |
| 4 | 2018/WRS/05 | சுதெஷ் என்டர்பிரய்சஸ் |
| 5 | 2018/WRS/06 | தருனி மரீன் என்டர்பிரய்சஸ் |
| 6 | 2018/WRS/08 | ஜய மெரீன் சேர்விஸ் |
| 7 | 2018/WRS/09 | சீ எஸ் டுவர்ஸ் அன் டிரான்ஸ்போட் சேர்விஸ் |
| 8 | 2018/WRS/10 | ஷானிகா மெரீன் கம்பனி |
| 9 | 2018/WRS/11 | மாரியா ஓஷன் சேர்விஸ் |
| 10 | 2018/WRS/12 | சியாம் சிட்டி சிமென்றி |
| 11 | 2018/WRS/13 | கலக்சி மரீன் சேர்விஸ் |
| 12 | 2018/WRS/14 | சாகர மரீன் அன்ட் இன்ஜினியரிங் |
| 13 | 2018/WRS/15 | பிரபலவு வர்ஸ் மெரீன் சேர்விஸ் |
| 14 | 2018/WRS/16 | விஸ்வித மரீன் என்டர்பிரய்சஸ் |
| 15 | 2018/WRS/1 | எஸ்.எச்.வில்சன் |
| 16 | 2018/WRS/1 | எம்.ஈ.என்.ரன்ஜித் மரீன் சேர்விஸ் |
| 17 | 2018/WRS/19 | பீ எம் லைப் |
| 18 | 2018/WRS/20 | கே.எல்.எஸ் மரீன் சேர்விஸ் |
| 19 | 2018/WRS/21 | நிவ் கலம்பு ஹார்பர சப்ளை |
| 20 | 2018/WRS/22 | கலம்பு டொக்யார்ட் |
| 21 | 2018/WRS/23 | சுடா ஸிப்பிங் சேர்விஸ் |
| 22 | 2018/WRS/24 | யுனைடட் ஓஷனிக் மரீன் சேர்விஸ் |
| 23 | 2018/WRS/25 | சுப்ரீம் பெரிடோ லங்கா |
| 24 | 2018/WRS/30 | கே.எல் குணசிரி அன்ட் சன்ஸ் |

7.1.2மீன்பிடித்தல் கைத்தொழிலில் இடம்பெறும் மாசடைதலைத் குறைத்தல்

கடல்சார் மாசடைதலுக்கு தாக்கமளிக்கும் மீன்பிடி கைத்தொழிலும் காணப்படுகின்றது. ஆதலால் அக்கைத்தொழிலில் இடம்பெறும் கடல்சார் மசடைதலைத் தடுப்பதற்கு இந்த அதகாரசபை நடவடிக்கை எடுத்துவருகின்றது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் 17 மீன்பிடி கிராம வலையங்களில் 17 சுத்திகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்களில் ஒழுங்கு செய்யப்பட்டன. அத்துடன் கடற்றொழிலாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஒவ்வொரு மீன்பிடி துறைமுகத்திற்கும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழப்பினை அதிகாரசபை தேவையான ஒத்துழைப்பினை அதிகாரசபையால் துறைமுகங்களுக்கு வழங்கப்பட்டன. மீன்பிடித்தொழில் கைத்தொழிலுடன் இணைந்துள்ள கடல் மாசடைவதை குறைப்பதற்கு தேசியக் கொள்கைகளையும், உபாயங்களையும் மற்றும் செயல் திட்டமொன்று வரைவாக்குதல் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சுகடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.





7.1.3 கப்பல்கள் மூலம் உருவாகும் கழிவுப்பொருட்களை மீள் சுழற்சி செய்வதன் மூலம் கடல்சார் சூழல் மாசடைதலைத் தடுத்தல்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை கப்பல்களிலிருந்து உருவாகும் கழிவுப்பொருட்களை சுத்திகரிகப்கும் சேவையை பதிவு செய்தல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்கின்றன. 2018 ஆம் ஆண்டிற்காக சேவை வழங்கும் 24 நிறுவனங்கள பதிவு செய்திருந்ததுடன் அந்த நிறுவனங்கள் மூலம் கொழும்பு காலி, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்ட ஆகிய வர்த்த துறைமுகங்களுக்கு வருகை தரும் கப்பல்களுக்காக சுத்திகரிக்கும் வசதிகளை வழஙப்பட்டன. இச்சேவை மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 22,531,480.00 ஆன வருமானம் உழைக்கப்பட்டது.

அட்டவணை 5 2018 ஆம் ஆண்டில் கழிவுப்பொருள் கொட்டுதல் சேவையிலிருந்து கிடைத்த வருமானம்

| விபரம் துறைமுகம் | கொழும்பு | காலி | அம்பாந்தோட்டை | திருகோணமலை |
|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் | 1365 | 161 | 58 | 76 |
| அனுமதிப்பத்திரங்களில் இருந்து கிடைத்த வருமானம் | 6,825,000.00 | 805,000.00 | 290,000.00 | 380,000.00 |
| ஊராய்வு நீக்கியி இருந்து கிடைத்த வருமானம் | 9,993,715.00 | 17,940.00 | 239,341.00 | 83,284.00 |
| வருமானம் (2018) | 16,818,715.00 | 822,940.00 | 529,341.00 | 483,284.00 |

அனுமதிப்பத்திர வழங்கல் - 2018




வரைபடம் 1 2018 ஆம் ஆண்டில் துறைமுகங்களில் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கல்

2018 ஆம் ஆண்டில் துறைமுகங்களில் கழிவுப்பொருட்களை அகற்றுதல் சேவை – வருமான பொழிப்பு

| | |
|---|---|
| ஊராய்வு நீக்கியிருந்து கிடைத்த வருமானம் | = 3,897,200.00 |
| அனுமதிப்பத்திரம் வழங்கலில் கிடைத்த வருமானம் | =8,300,000.00 |
| உராய்வு நீக்கி அகற்றலில் இருந்து வருமானம் | =10,334,280.00 |
| கப்பல் கழிவுப்பொருள் மீள் வழங்கல் 2018 ஆம் ஆண்டின் போது கிடைத்த மொத்த வருமானம் | =22,531,480.00 |




வரைபடம் 2 2018 ஆம் ஆண்டில் கப்பல் கழிவுப்பொருள் மீள் அகற்றல் சேவை மூலம் உழைத்த வருமான சதவீதம்

7.1.4 கப்பல்களுக்கு எரிபொருள் வழங்குதல் (தாங்கிகள்) சேவையின் போது இடம்பெறும் கடல்சார் சூழலைப் பாதுகாத்தல்

2011 இன் 2 ஆம் இலக்க தாங்கிகள் (கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு) பிரமாணங்களின் பிரகாரம் எண்ணைய் வழங்கும் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதேவேளை எண்ணைய் வழங்கும் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்தரங்கள் வழங்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் பங்கரிங் எண்ணைய் வழங்குவதற்காக 11 கப்பல்கள் பதிவு செய்திருந்ததுடன் இலங்கை துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களுக்கு பௌசர் மூலம் 01 நிறுவனமும் திருகோணமலையில் பங்கர் எண்ணைய் தாங்கி தொகுதிக்காக லங்கா IOC கம்பனி ப்கர் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் பங்கர் அனுமதிப்பத்திரங்கள் மூலம் ரூபா 1,725,000.000 வருமானம் உழைக்கப்பட்டது.

அட்டவணை 6 2018 ஆம் ஆண்டில் பங்கர் எரிபொருள் வழங்குவதற்காக பதிவுசெய்யப்பட்ட கப்பல் கம்பனிகள்

| | இல | கப்பலின் பெயர் | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| **01** | 2018/Bun/01 | எம்.ரீ கண்டி | இன்டர் ஓஷன் எனர்ஜி பிரைவேட் லிமிட்ட் |
| **02** | 2018/Bun/02 | எம்.ரீ.சேர்மக் | இன்டர் ஓஷன் எனர்ஜி பிரைவேட் லிமிட்ட் |
| **03** | 2018/Bun/03 | எம்.ரீ. ஓஷன் காலல | இன்டர் ஓஷன் எனர்ஜி பிரைவேட் லிமிட்ட் |
| **04** | 2018/Bun/05 | எம்.ரீஎல்.எம்.எஸ் துன்ஹிந்த | லங்கா மெரீன் டைம் எனர்ஜி பிரைவேட் லிமிட்ட் |
| **05** | 2018/Bun/06 | எம்.ரீஎல்.எம்.எஸ். லக்ஷபான | லங்கா மெரீன் டைம் எனர்ஜி பிரைவேட் லிமிட்ட் |
| **06** | 2018/Bun/07 | எம்.ரீ.சீ. பெல்கன் | மோசட்டி இன்டர்நஷனல் பிரைவேட் லிமிட்ட் |
| **07** | 2018/Bun/08 | எம்.ரீ.ஓஷன் டிரன்கொ | லங்கா ஐ ஓ சீ பீஎல்சீ |
| **08** | 2018/Bun/09 | லங்கா மெரைன் நில்வளா | லங்கா மெரீன் டைம் சேர்விஸ் பிரைவேட் லிமிட்ட் |
| **09** | 2018/Bun/10 | லங்கா மெரைன் மஹாவலி | லங்கா மெரீன் டைம் சேர்விஸ் பிரைவேட் லிமிட்ட் |
| **10** | 2018/Bun/12 | எம்.ரீ ஓஷன் லங்கா | இன்டர் ஓஷன் எனர்ஜி பிரைவேட் லிமிட்ட் |
| **11** | 2018/Bun/13 | எம்.ரீ. குமண | லங்கா மெரீன் டைம் எனர்ஜி பிரைவேட் லிமிட்ட் |

7.15. கடலுக்குள் சுத்தகரிக்கப்பட்ட கழிவு நீரை வெளியேற்றுவதற்குரிய அனுமதிப்பத்திரங்கள் மூலம் கடல்சார் சூழல் மாசடைதலை குறைத்தல்

2013 இன் 1 ஆம் இலக்க சுற்றாடல் பாதுகாப்பு (கடலுக்குள் அகற்றுவதற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்) கட்டளையின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மூலம் கடற்கரைரை எல்லயஅ ண்மித்தாக ஹொட்டெல் மற்றும் தொழிற்சாலைகளின் கழிவு நீரை முறையாக வெளியேற்றுவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் கடந்த ஆண்களில் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை அட்டவணை (7) மற்றும் வரைபு (3) மூலம் காட்டப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களில் 50% அதிகரிப்பொன்றை காட்டுகின்றது.




வரைபு 3 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

அட்டவணை 6 முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக அனுமதிப்பத்திரங்களில் அதிகரிப்பு 2015-2018

| ஆண்டு | அதிகரிப்பு % |
|---|---|
| 2015 & 2016 | 37% |
| 2016 & 2017 | 86% |
| 2017 & 2018 | 50% |

வருடாந்த அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு ஹொட்டெல் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள் தொடர்புபட்டமை தொடர்ச்சியாக அதிகரிப்பொன்றை காண்பித்தது. அதன் பிரகாரம் 1015 ஆம் ஆண்டில் 69 ஆன அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 95 வரையிலும் 2017 இல் 117 வரையிலும் 2018 இல் 266 வரையும் அதிகரித்திருந்தது.

கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் மூலம் பெற்றுக்கொண்ட வருமானம் பின்வரும் அட்டவணையில் (7) மற்றும் வரைபு (4) மூலம் காட்டப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் வருமானம் 62% அதிகரிப்பொன்றை காட்டியது.

2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அனுமதிப் பத்திரங்களை வழங்கி அதிகாரசபை உழைத்த வருமானம்

| ஆண்டு | வருமானம் ரூபா |
|---|---|
| 2015 | 675,443.84 |
| 2016 | 1,897,397.26 |
| 2017 | 2,303,452.05 |
| 2018 | 3,725, 654.33 |




வரைபு 4 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம்

அட்டவணை 8 முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அனுமதிப்பத்திரங்கள் மூலம் பெற்றுக்கொண்ட வருமானம் அதிகரிப்பு 2015-2018

| ஆண்டு | அதிகரிப்பு |
|---|---|
| 2015 & 2016 | 181% |
| 2016 & 2017 | 21% |
| 2017 & 2018 | 62% |

7.1.6 கடல்சார் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை் வழங்குதல்

2011 இன் 01 ஆம் இலக்க பெற்றோலியம் உட்பட இயற்கை வளங்கள் தொடர்பாக கடல் அகழ்வு மற்றும் பயன்பாடுகளுக்கு உட்படுத்திக் கொள்வதற்குமான (கடல்சார் சூழல் பாதுகாப்பு) கட்டளைகளுக்கு அமைய மசகு பெற்றோலியத்தை பிரித்தெடுப்பதற்கு உரிய கடல்சார் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குதல் இந்த அதிகாரசபையினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

2018 ஆண்டினுள் இலங்கையில் கிழக்கு கடல் பிரதேசத்தினுள் இரு பரிமாண புவியியல் ஆய்வொன்று (2D seismic surveys), Schlumberger Multiclient நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பின்பு மேற்கு கடல் பிரதேசங்களிலும் இரு பரிமாண புவியில் ஆய்வொன்று (2D seismic surveys) அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வுகளுக்குரிய 2 கடல்சார் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்டன. இது தொடர்பான (ஆரம்ப) அடிப்படை சூழல் சார் பரிசோதனை அறிக்கை (Initial Environment Examination reports) அங்கீகாரம் வழங்குதல் மற்றும் சூழல் சேதங்கள், இழப்பீடுகளை மதிப்பீடு செய்யும் செயற்பாடுகளையும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பங்களிப்புடன் செய்யப்பட்டது.



7.1.7 இலங்கையின் கிழக்கு மற்றும் தெற்கு கடந்கரையில் பவளப் பாறைகளை மீண்டும் நிறுவுதல் திட்டம்

இலங்கையின் கடல் பிரதேசங்களில் காணப்படக்கூடிய விசேடமான சூழல் கட்டமைப்பாகிய பவளப்பாறைகள் மனித செயற்பாடுகளினால் அழிவடையும் ஆபத்திற்கு உட்பட்டிருக்கின்றது. இந்த திட்டத்தின் பிரதான நோக்கம், தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் பவளப் பாறைகளை மீண்டும் மீளமைத்தல் தொடர்பில் பொருத்தமான விதிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதனூடாக சூழல் கட்டமைப்பு அபிவிருத்தியினூடாக இலங்கையின் மீன்பிடி மற்றும் கடல் சார் சுற்றுலாத்துறையை நிலைபேறாக்குதலாகும். இது குறிப்பிட்ட திட்டமொன்றாகும். அதே வேலை இதன் வெற்றியினால் பவளப்பாறை மீள்நிர்மாணம் செய்வது தொடர்பில் இலங்கையின் வேறு பிரதேசங்களில் இந்த ஆய்வை மீண்டும் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்பிரகாரம் மிரிஸ்ஸ மற்றும் கயன்கர்ணியில் சேதமடைந்த பவளப்பாறைகளை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பில், ஒதுக்கப்பட்ட கொங்கரீட் மூலம் தயாரிக்கப்பட்ட துண்டுகளை பயன்படுத்தி பவளத்துண்டுகளின் மீண்டும் நடப்பட்டது. இந்த ஆய்வின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இருந்ததுடன், மீண்டும் நடப்பட்ட பவளப்பாறைகள் இயல்பான வாழ்வு / பிழைப்பு அல்லது உயர்வாழும் வீதம் 65% ஆக இருப்பதுடன் இறப்பதற்கான சாத்தியக்கூறு (இறப்பு வீதம்) 35% ஆகவும் காணப்பட்டது. மீண்டும் நடப்பட்ட பவளப்பாறைகளுக்கு அருகில் விசேடமான மீன்கள் ஒன்றுசேர்வதனை காணக்கூடியதாக இருந்ததுடன், பரிசோதனைக் காலத்தினுள் விசேட மீனினங்கள் விசேடமான 25 வகைகள் மீண்டும் நடப்பட்ட பவளப்பாறைகளுக்டன் பவள உருண்டைகளுக்கு அருகில் காணப்பட்டன.



7.1.8 காயன்கேரனி பவளப்பாறையை பாதுகாப்பது தொடர்பாக உள்ளக நிறுவனங்களை தொடர்புபடுத்தல் வேலைத்திட்டத்தை **(Interagency coordination mechanism)** நடைமுறைப்படுத்தல்

காயன்கேணி பவளப்பாறைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை மற்றும் வாகரைக்கிடையிலான பிரதேசத்தில் பாசிக்குடா பவளப்பாறைக்கு அண்மையில் அமைந்திருக்கும் மிகவும் அழகான பவளப்பாறை கட்டமைப்பொன்றாகும். அதேபோன்று இந்த பவளப்பாறையானது மிகவும் உயர்வான பல்வேறுபட்ட உயர்வளங்களைக் கொண்ட உயிருள்ள விசேடமான பவளப்பாறைகள் அதிகமாகக் கொண்ட சூழல் கட்டமைப்பொன்றாகும். இந்தப் பவளப்பாறைகளுக்கு அருகாமையில் ஆறுதல் கட்டமைப்பில் பவளப்பாறைகள் விசேடமானவை 51 உம் 9 வகையான அல்காக்களும் 3 வகையான் கடற் புல்லினங்களும் 115 விசேட விலங்குகளும் 206 விசேட மீனினங்களும் மற்றும் 2 வகையான விசேடமான கடல் ஆமைகளும் இதுவரை அறியப்பட்டுள்ளது. இலங்கையை சுற்றியுள்ள கடலோரப் பரப்பில் பவளப்பாறைகள் பல்வேறு வகையைக் கொண்டிருப்பினும் இன்று வரைக்கும் அந்த சூழல் கட்டமைப்பின் பெரும்பாலானவை மனித செயற்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றங்களின் காரணமாகவும் முற்றாகவே அல்லது பெறும் பகுதியாகவோ அழிவுட்குட்பட்டிருக்கின்றது. இதுவரைக்கும் இலங்கையினுள் எஞ்சியிருப்பது உயிருள்ள பவளப்பாறைகள் கட்டமைப்புக்கிடையே காயங்கேர்ணி பவளப்பாறை சூழல் கட்டமைப்பு மிகவும் பெறுமதி வாய்ந்த சூழல் கட்டமைப்பொன்றாகும். அலங்கார மீன் கைத்தொழில் தொடர்பாக நீண்டகாலம் தொட்டு பிரபல்யமாக காணப்படும் இந்த சூழல் முறைமையொன்றாகும். இற்றையளவிலும் குப்பைகூலங்களால் ஏற்படும் கடல்சார் சூழல் மாசடைவாலும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளாலும் மற்றும் முறையற்ற சுற்றுலா தொழில்துறைகளின் காரணங்களினால் அழிவடையும் அபாயத்திற்கு உள்ளாகியிருக்கின்றது.

ஒழுங்குமுறையான முகாமைத்துவத்தினூடாக மிக உயர் பெறுமதியுடைய இந்த சூழல் கட்டமைப்பை பாதுகாத்து வளரும் சமுதாயத்திற்கு ஒப்படைக்கும் நோக்கில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் என்பவற்றின் தரப்பின் முனைப்பின் கீழ் பகுதிக்குரிய நிறுவனங்களின் பங்குபற்றலுடன் உள்ளக நிறுவன இணைப்பு சேவைத்திட்டம் (Inter Agency Coordination Mechanism) நடைமுறைப்படுத்தப்பட்டது. பல்வேறு மனித செயற்பாடுகள் மற்றும் இயற்கை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் தாக்கங்களை குறைத்து பவளப்பாறைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு உரிய சகல பிரிவுகள் மற்றும் சமூகங்களின் உதவிகளை பெற்றுக்கொண்டு பவளப்பாறைகளை பாதுகாத்தல், இதன் நோக்கமாகும். நிறுவனங்களை உள்ஙிணைவின் மூலம் நிலைபேராகி இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இங்கு கூறிய நிறுவனங்களாக, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்ப, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தேசிய நீரியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், இலங்கை கடற்படை, கரையோர பாதுகாப்புத் திணைக்களம், கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், கடற்றொழில் கூட்டுத்தாபனம், இலங்கை தேசிய நீரியல் உயிர்வாழ் அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா அமைச்சு, இன்டர் நஷனல் யூனியன் போர் இன்ஸவேர்ஷின் ஒப் நேசர் நிறுவனம் (International Union for Conservation of Nature IUCN), யுனைடர் நேகன் டிவலொப்மெண்ட் நிறுவனம் (United Nations Development Programme – UNDP), ப்லூரிஸோஸ்ஸ் ஒர்கண்ஸேசன் (Blue Resources Organization) ஆகிய நிறுவனங்கள் செயற்படுகின்றன.

இந்த வேலைத்திட்டத்தில் முதல் கட்டமாக காயன்கேர்ணி பவளப்பாறையை கடல்சார் பாதுகாப்பு வலயமாக அறிவித்தலாகும். "நாட்டுக்காக ஒன்றாய் இருப்போம்" மட்டக்களப்பு மாவட்ட வேலைத்திட்டத்தின் போது 2019 ஏப்ரல் 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இங்கு அடிப்படை செயற்பாடாக காயங்கேணி, பவளப்பாறையை GPS குறிகாட்டிகள் மூலம் வரைபட ஆவணப்படுத்துதல் மற்றும் பல்வகைப்படுத்தல் தன்மையை ஆய்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் செயலமர்வு திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டமை இங்கு மட்டக்களப்பு மாவட்ட செயலாளரின் தலைமையின் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு தெளிவூட்டல் சேவைத்திட்டமொன்றும் அதனூடாக காயங்கோண் பவளப்பாறைகளைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பில் இளைஞர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை உருவாக்கப்பட்டது. முன்னுள்ள வேலைத்திட்டத்தினால் இந்தக் குழுவிற்கு பயிற்சியளித்து இந்த சூழல் கட்டமைப்பை சிறந்த ஒழுங்கமைப்பாக பாதுகாத்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.





7.1.9 இலங்கையில் கொழும்பு மற்றும் காலி வணிக துறைமுகங்களில் அன்னிய ஆக்கிரமிப்பு கடல் விலங்கு இனங்கள் ஆய்வு செய்யும் திட்டம்

சூழல் கட்டமைப்பால் உள்நாட்டில்லாத இனங்களை அறிமுகப்படுத்துவது உயிர் பல்வகைத் தன்மை குறைவடைவதற்கு ஒரு காரணமாகும். கப்பல்கள் மூலம் வெளியிடப்படும் பெலஸ்ட் நீர் மற்றும் ஏனைய வழிகளிலும் அன்னிய ஆக்கிரமிப்பு உயிரினங்களுக்கு உணவழித்தல் கடுமையான ஆபத்தை கொண்டிருக்கிறது. அது தொடர்பில் தேசிய பெலஸ்ட் நீர் முகாமை உபாய மார்க்கமொன்றுக்கு அமைய, இலங்கையினால் நிகழ்கால உபாய மார்க்கமொன்றுக்கு அமைய, இலங்கையினால் நிகழ்கால உள்நாட்டு மற்றும் உள்நாட்டல்லாத இனங்களின் பல்வகைத் தன்மை சமூகமளித்தல் தொடர்பாக துறைமுக உயிரியல் விஞ்ஞானம் அடிப்படை ஆய்வினை செய்திருந்தது. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட துறைமுக உயிரியல் விஞ்ஞான அடிப்படை ஆய்வு மூலம் அறிமுகமற்ற கடல் வாழ் உயிரின வகைகள் அறிந்து கொள்ளப்பட்டன. இவ்வாறு இனங்கண்டு கொள்ளப்பட்ட இடம்பெயர் உயிரினங்கள் வகை ஆக்கிரமிப்பு வகையினங்களா என அனுமானிக்க ஆய்வு செய்யப்பட வேண்டியதுடன், இந்த திட்டத்தினூடாக அது மேற்கொள்ளப்படுகின்றது. அதனால், துறைமுகத்தில் இடம்பெறக்கூடிய ஆக்கிரமிப்பாக தீர்மானிப்பதற்காகவும், முன்வைக்கப்பட்ட ஆய்வு பிரதேசங்களில் பூகோள ரீதியாக தெறிந்த கடல் ஆக்கிரமிப்பு உயிரினங்களான உள்நாட்டு அல்லாத உயிரினங்கள் தொடர்பில் ஆய்வு செய்தல் தொடர்பாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.











7.2 கடல்சார் சூழல் மாசடைவதை நீக்குவதற்கான முறைகளை மேம்படுத்துதல்

7.2.1 கடற்கரை சூழல் சுயவிபரமொன்றை **(Coastal Environments profile)]** தயாரித்தல்

இலங்கையை சுற்றி அந்த உயிர்பல்வினத்தன்மைக்கு அமைய கடற்கரை சூழல் ஒழுங்குமுறைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் அது தொடர்பிலான ஆய்வுகள் தொடர்பில் முக்கியத்துவமான கடல்சார் சூழல் அமைப்பை கட்டியெழுப்புதல் தொடர்பில் இந்த அதிகாரசபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் அம்பாந்தொட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இந்த செயலமர்வு நடைமுறைப்படுத்தப்பட்டது. சூழல் தகவல்களுக்கு மேலதிகமாக, கடல்சார் மற்றும் கடற்கரை மாசடைவுக்கு காரணமாகக்கூடிய மாசடைவு மூலங்களின் தொடர்பில் ஆய்வுகுட்படுத்தி வரைபட ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7.2.2. மாற்று வழியில் கடற்கரை பாதுகாப்பினரை தெளிவு செய்யும் வேலைத்திட்டம்

2017 திசெம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் சுத்தமான கடல் சூழல் போட்டி (Clean seas compaign) தொடர்பில் இலங்கையும் பங்காளராக இருந்தது. அந்த வகையில் கடல் தொடர்பில் பங்களிப்புச் செய்வதில் கடல்சார் சூழல் மாசடைவதை குறைப்பது தொடர்பில் மக்கள் பங்களிப்பினூடாக நிலைபேறாக கடற்கரையை பாவிப்பது தொடர்பில் கடற்கரை பாதுகாப்பினர் (Beach care takers) ஐ தெரிவு செய்யும் வேலைத்திட்டம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மூலம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த வேலைத்திட்டத்தை மிகவும் திறனாக நடைமுறைப்படுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. அதனடிப்படையில் கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு இடையில் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஒரு உடன்படிக்கைக்கு வந்ததுடன் முன்வைக்கப்பட்ட கடற்கரை பாதுகாப்பு பிரிவினரை தெரிவுசெய்யும் உத்தேச வேலைத்திட்டம் தொடர்பில் கடல்சார் பாதுகாப்பு அதிகார சபையின் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் அறிவூட்டல் செயலமர்வொன்று 2018.07.18 ஆம் திகதி பத்தரமுல்ல மத்திய சுற்றாடல் அதிகாரசபை கோட்போர் கூடத்தில் நடைபெற்றது.





கடற்கரையை பாதுகாப்பேரை உத்தியோக ரீதியாக நியமனம் செய்தல் 2018 செப்தம்பர் 16 ஆந் திகதி மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் கௌரவ மைதிரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் காலி தடல்ல கடற்கரையில் விழாவொன்று நடாத்தப்பட்டது.




இவ்வேசலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2018.12.19ஆந் திகதி சமுத்திர பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு இடையில் ஒரு உடன்படிக்கை பத்தரமுல்ல சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் கைச்சாத்திடப்பட்டது.





2018.12.31 ஆந் திகதி கடற்கரை பாதுகாப்போர் 52 பேர் கரையோர மாவட்டங்களை மேவுகை செய்யும் வகையில் நியமனம் செய்யப்பட்டனர்.



2018.12.31 ஆந் திகதி இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம்

| | மாவட்டம் | செயற்படுத்தப்பட்ட கடற்கரை பாதுகாவலர்கள் | சுத்திகரிப்பு கடற்கரை எண்ணிக்கை | சுத்திகரிப்பு கடற்கரை ஓரங்களின் தூரம் |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 4 | 4 | 2 |
| 2 | கம்பஹா | 9 | 9 | 6.4 |
| 3 | களுத்துறை | 3 | 2 | 1 |
| 4 | காலி | 5 | 4 | 2 |
| 5 | மாத்தறை | 3 | 3 | 2.9 |
| 6 | அம்பாந்தோட்டை | 3 | 3 | 3 |
| 7 | திருகோணமலை | 4 | 4 | 2 |
| 8 | மட்டக்களப்பு | 4 | 3 | 7 |
| 9 | அம்பாறை | 6 | 4 | 4.7 |
| 10 | புத்தளம் | 4 | 4 | 6.5 |
| 11 | யாழ்ப்பாணம் | 3 | 3 | 3 |
| 12 | மன்னார் | 4 | 4 | 8.2 |
| | கிளிநொச்சி | **52** | **47** | **48.7** |

7.3 சமுத்திர சுற்றாடல் மாசடைதல் மற்றும் தாக்கம் தொடர்பாக அறிவூட்டுதல்

7.3.1 பாடசாலை நுண் குழுக்களை அறிவூட்டுதல்

அட்டவணை 10 கரையோர மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள பாடசாலை நுண் குழுக்கள்

| மாவட்டம் | பாடசாலை நுண் குழுக்கள் |
|---|---|
| கொழும்பு | 15 |
| களுத்துறை | 25 |
| காலி | 39 |
| மாத்தறை | 33 |
| அம்பாந்தோட்டை | 31 |
| அம்பாறை | 20 |
| மட்டக்களப்பு | 04 |
| திருகோணமலை | 03 |
| யாழ்ப்பாணம் | 21 |
| மன்னார் | 25 |
| புத்தளம் | 49 |
| கம்பஹா | 30 |
| மொத்தம் | **295** |

இப்பாடசாலை நுண்குழுக்காக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் உலக சமுத்திர தினம் மற்றும் சர்வதேச கடற்கரை சுத்திகரிக்கும் தினத்தை கொண்டாடும் நிகழ்ச்சித்தின் போது இந்த மாணவர்களின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படுகின்றன.





7.3.2.சர்வதேச சமுத்திர தினத்தை கொண்டாடுவதற்காக நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தலும் நடாத்துதலும்

7.3.2.1 உலக சமுத்திர தினம்

